உ

கணபதிதுணை.

சிவசண்முக தேசிகன்றுணை.

14667.

# மயிலாசலசதகம்

66

திருக்கைலாயபரம்பரை
பொம்மபுரம சிவஞானபாலய தேசிகராதீனத்து
மகாவித்துவான் ஆசிரியர்

## நமசிவாய நாவலரவர்கள்

இயற்றியது.

ஷை யாதீனத்து வித்துவானும் இந்நூலாசிரியர் மாணாக்கரும்
பண்ணுருட்டி கருணைப்பிரகாச வித்தியாசாலை
வீரசைவமடாலயம் வேலாசலநிலயம்
இத்தெய்வத்தானங்களின்
அதிபதியுமாகிய
ஸ்ரீவாகீசபக்த நாவலரென்னும்
ஸ்ரீலஸ்ரீ மணி

## அப்பாவையரவர்கள்

கட்டளையிட்டருளியபடி
இந்நூலாசிரியரின் குமாரரும் கருணைப்பிரகாச
வித்தியாசாலையுபாத்தியாயருமாகிய
சுப்பிரமணிய வையரால்
பரிசோதித்து

பண்ணுருட்டி
அளவு கந்தசாமிப்பிள்ளை குமாரர்
அ. க. சிவசிதம்பரப் பிள்ளை
புதுப்பேட்டை
இருளப்ப செட்டியார்
இவர்கள்
செய்தபொருளுதவியால்

சென்னை
மஹாலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

விரோதிகிருதுஷு
மேடமதி.

U.V. SWAMINATHA ... UPADHYAYA ... TIRUVANMIYUR

உ

கணபதிதுணை.

சிவசண்முக தேசிகன்றுணை.

14667

# மயிலாசலசதகம்.

திருக்கைலாயபரம்பரை
பொம்மபுரம் சிவஞானபாலய தேசிகராதீனத்து
மகாவித்துவான் ஆசிரியர்

**நமசிவாய நாவலரவர்கள்**

இயற்றியது.

ஷை யாதீனத்து வித்துவானும் இந்நூலாசிரியர் மாணாக்கரும்
பண்ணுருட்டி கருணைப்பிரகாச வித்தியாசாலை
வீரசைவமடாலயம் வேலாசலநிலயம்
இத்தெய்வத்தானங்களின்
அதிபதியுமாகிய
ஸ்ரீவாகீசபக்த நாவலரென்னும்

ஸ்ரீலஸ்ரீ மணி

**அப்பாவையரவர்கள்**

கட்டளையிட்டருளியபடி
இந்நூலாசிரியரின் குமாரரும் கருணைப்பிரகாச
வித்தியாசாலையுபாத்தியாயருமாகிய

சுப்பிரமணியவையரால்

பரிசோதித்து

பண்ணுருட்டி
அளவு· கந்தசாமிப்பிள்ளை குமாரர்

**அ. க. சிவசிதம்பரப் பிள்ளை**

புதுப்பேட்டை

**இருளப்ப செட்டியார்**

இவர்கள்
செய்தபொருளுதவியால்

சென்னை
மஹாலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
விரோதிகிருதுஹு
மேடமதி
1911

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY THIRUVANMIYUR

உ

சிவமயம்.

## விழுப்புரம் - பழநியாண்டிப் பிள்ளையவர்கள்

இயற்றியது.

பூமேவுபொழிற்றும்பிப்புயலடைக்க நிறமொன்றாய்ப்பொலியுமயிலைத்
தேமேவுசண்முகற்குச்சதகமொன்று செய்தளித்தான்சிறப்பதாக
பாமேவுமிலக்கியமுமிலக்கணமுமறிறபத்தேர் பண்புவாய்ந்த
காமேவுபண்ணுருட்டிநமச்சிவாயப் புலவக்கவிஞரேறே.

---

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

## இந்நூலாசிரியர்மாணாக்கர்

## மணி - அப்பாவையரவர்கள்

## இயற்றியது.

பூங்கமழும்பொதும் பரெழிற்பொழிற்றேனப்புனிததடத்
தாங்கமழுமரைப்பூவினகவிதழினிடை நிற்குந்
தீங்கமழுமதுவருந்திச் செல்காலையந்நீரிற்
றேங்கமழுஞ் சிவங்கமழுமுனைப்பாடித் திருநாட்டில். (க)

திருவைதிகர்மடவார்கட் சேடியரினுடன்கூடி
மருவறுநீர்குடைந் தொழுகுங்கெடிலநதிவடபாங்கர்
பொருவிலருமாடங்கட் போந்துவானகடுதொட
வருமரியவதிகைநகர் குடக்கிலோர்வராகபுரி (உ)

பொன்னாருமிதழிசடைப்புனிதனார்பால்வந்த
மன்னாருமுயர் வீரபத்திரனாம்மாதேவன்
றன்னாருமதிதேவாய்த் தயங்குமங்கலிங்ககுல
மின்னாருங்குடிவாழ்வோன் வீரசைவகுலதிலகன் (௩)

வணங்கருஞ் சுப்பிரமணியன்மனைவி சௌபாக்கியத்தோ
டிணங்கரியவைதீகநெறியாலில்லறநடத்தி
யுணங்குமிடையாரோடு கூடிவாழ்ந்துமநாளி
லணங்கனையவவர்பாலோர் குழவியாயவதரித்தார் (௪)

குருமொழிமந்திரம் நமச்சிவாயமெனுங்குலவிடுபேர்
மருவிடப்பெற்றனர் தாதைமற்றவரைவிளிக்குங்கா
லுருவுடைமந்திரம்புகல வொண்ணாதென்றே நினைந்து
வெருவிபஞ்சாக்கரமென்றே தினமும்விளித்திடுவார் (௫)

அகவையைந்தாண்டுசெலப்பள்ளிய மர்ந்தருளிமுனம்
மிகமுயன்றதவத்தாலேயோ தாமேமேற்கலைகட்
புகவுளத்திற்பயின்றனரப்புதுமை யறியாதாரார்
தகவிலர்தக்காரென்னுங் குறள்விளக்கித்தாம்வளர்ந்தார் (௬)

அந்நிலையிற்றாதை சிவபதமடையமணியைய
னென்னுமாதுலன்றன்னை யின்றாதையெனப்போற்றி
முன்னிலையிலுபசரித்தங்கவர் மொழிகேட்டதிபதியாய்த்
தன்னரியகுடும்பமுறக்கொடுவாழ்ந்து சாருநாள் (௭)

தக்கபெருங்கல்வி நிறைதம்பிரானையவொரு
சொக்கபுராமலிங்கருடன் சின்னாட்டுகளறத்த
மிக்கசைவசித்தாந்தமேறகருவிநூற்கேள்வி
யெக்கலுறப்பழகியவர் தம்மோடிலவிடைவதிந்தார் (அ)

தேமாவின் பழச்சாற்றேவிதனைத்தினமாட்டி
பூமாவினிழற்†சோலைவதி இபூதபவிடியமுந்
தோமாற்றி நிகழ்காலஞ்சொலுந்தூயசிவயோகி
யாமார்ந்ததவவப்பாவையர் மேற்றுதிபாடி (௯)

பலசீட்டுக்கவிபாடிப்பற்பல மாணாக்கருக்கு
நலமாயகழகமொன்றைநகரி தனிற்றாபித்து
மலமோட்டுஞ் சண்முகற்கோர்கோயில் வகுத்திடவெண்ணி
வலமயிலையறுமுகற்கோர்சதகம் வாய்மலர்ந்தனரால் (௧௦)

அஃதுபுரிந்தநாட்டொடங்கிமோன நிலைதானடைந்தே
யிதுமுகத்தவள்ளிதெய்வதயானை யிணைபிரியா
விதுமுகத்தசண்முகனை விலங்கலொன்றிற்றாபித்துப்
புதுமையுறவேநினைந்து போதருமக்காலத்தே (௧௧)

ஞானமுனைக்கோர்வரப்பாம்மோனநிலைநாளுளுந்
தானமுறமேலோங்குத்தாமதுவேயதுதாமாய்ப்
பானமுதலாம் நீக்கிப்பயிலுங்காற்சாக்கிரத்தே
வானமுதற்சிவலோககாட்சியினைவாய் மலர்வார் (௧௨)

இந்திரன்றன்னகர்காண்கின்றேமென்பாரிறையிருக்கு
மிந்திரன்றனரியணையுமினியவோலக்கமுமே
லிந்திரன்றனூர்திகளுமவைக்கப்பாலிலங்குதவ
விந்திரன்றனுறையுளுங்கண்டனமென்றேயியம்பிடுவார் (௧௩)

பலவிரிப்பதென்ஞானபாரகனேயிவரென்று
நிலவுலகத்தவரிறும்பூதெய்தினரிவ்விதம்நிதமு
முலவிடும்போதிவர்மேலோர்ஞானமணமோங்குறுமே
சிலபகலிவ்வணமிருந்தேசிவபதஞ்சேர்ந்தருளினார். (௧௪)

---

† சோலை—தம்பிப்பேட்டைபாளயம்.   * தேவி—மகாதேவி.

அன்னர்திருவாய்மலர்ந்தசதகமதனையவர்மைந்தன்
பன்னைமடனின்றெழுதிப்பதிப்பிப்பான்மனத்துன்ன
மன்னுதவமுறுகந்தசாமிவரத்தினிற்பெற்ற
முன்னுசிவசிதம்பரனச்சிட்டுமுடித்திட்டனனால். (௧௫)

---

கூடலூர் - முருகேச ஐயர் குமாரரும்
கவரப்பட்டு-போர்டுபாடசாலை யுபாத்தியாயருமாகிய

## அப்பாதுரை ஐயரியற்றியது.

பொன்மணல்வரன்றிவந்திழியருவி மயிலைமால்வரைபுனிதன்மேல்
நன்மைசால்சதகமெனுமொருபனுவல்நலம் பெறச்செய்தணிந்தனனாற்
கன்மையெம்மனத்தையுருக்குபோதகனாய்க்கவினுறமாதுலனாகித்
தன்மைசேர்நமச்சிவாயநாவலராந் தற்பரநற்பெருந்தகையே.

(போதகாசிரிய வணக்கம்)

நம்பினேனுனையேநாயினேற்குணர நற்கலைதெரித்ததேசிகனே
யிம்பரினுனைத்தேவெனநினையா நாளிலையெனவாணையிட்டிசைப்பேன்
கம்பராம்நீயேயுன்னருந்தமிழாற் கருதினேன்வியப்பொன்றுகரைவே
னம்பிகாபதியாமுன்னருஞ்சு தனிலஃதொன்றினுலகமகிழ்ந்தனனே.

இந்நூலாசிரியர் குமாரர்

## சுப்பிரமணிய ஐயர் இயற்றிய

தந்தை வணக்கம்.

மாமணிமகுடச்சேடனாற்றாங்க வயங்குமிம்மண்ணிடையுற்ற
தூமணியாயசுப்பிரமணியத் தோன்றலுக்கோர்சுதனாகிப்
பாமணியெழுத்தான்மாலையாஞ்சதகம் பண்பொடும்பாடியதூய
தேமணியாயதந்தையாம் நமச்சிவாயதேசிககுருமணியே. (௧)

கற்பனையாயவுலகினையொருவிக்கந் தனையனுதினம்பரவி
நற்பரமானநிலையினையுணர்ந்த நலத்தசுப்பிரமணியன்பாற்
றற்பரனாகியுதித்தனைதக்கார் தகவிலரெனுங்குறட்சார்ந்தே
சிற்பரனாயதந்தையாம் நமச்சிவாயதேசிககுருமணியே. (௨)

உன்னரும்பெரியதந்தையாயடியேற் கோங்குமூதாதையாயுற்ற
பன்னரும்பிரமசமாசநற்றலைவ பாகராஞ்சுப்பிரமணிய
னென்னுமுன்றந்தையுனைவிளிக்குங் கான்மனுவெனப்பயமுறீஇயினைத்தான்
மன்னுமென்றனையாள்தந்தையாம்நமச்சிவாயதேசிககுருமணியே. (௩)

சிவமயம்

# நூலாசிரியர்வரலாறு.

ஸ்ரீ வேதாகமோக்த சித்தாந்தப்பிரவர்த்தக வீரசைவசமயத்திலே, சென்றநூற்றாண்டின் முற்பகுதியிலேஇப்பண்ணுருட்டிநகரிலே, இற்றைக்கு நூறுவருடங்கட்குமுன்னமே, குழந்தைவேலையரெனவும் முத்தையரெனவும் மைத்துனர்முறைமைவாய்ந்த இருவர்புலவர்களாக விளங்கவீற்றிருந்தனர் இதிற் குழந்தைவேலையரின்புத்திரர், கனகசபையையர். இவர்தனயர் மணிகுழந்தைவேலையர். இவர்குமாரர் சரிதமுதலியன. திராவிடவீரசைவமரபட்டவணையிற்காண்க.

முற்கூறியமுத்தையரென்பார்க்கு சுப்பிரமணியவையரும். இவர்க்குசண்முகவையர். நமசிவாயவையரெனவிரண்டு குமாரர்களும், திலதவதி இசைஞானியெனவிரண்டு குமாரத்திகளுமுதித்தனர் ஷை சுப்பிரமணியவையர், திருத்தணிகைவிசாகப்பெருமாளையரிடங் கல்வியின்றபட்டாம்பாக்கம் மேலமடம் சுப்பராயவைரிடம் பாரகாவியங்கட் சிலபயின்றனர். இன்னுஞ்சிலபெரியாரையடுத்து தர்க்கம்வீரசைவசமயசாத்திரம் சித்தாந்தசாத்திர முதலியனபயின்றுநைட்டிகச் சிவயோகியாய இல்லறஞானியாய் இருந்துகொண்டு பலநன்மாணாக்கர்கட்குப் போதித்துவந்தனர். இவர்கல்வி கேள்வி அன்பு அறிவு அடக்கம் சாந்தம் இன்சொல் முதலியநற்குணங்களோடு வீற்றிருந்தமையால், அக்காலம் திருவதிகையிலிருந்த தணிகாசலமுதலியாரென்பார் இவரிடம் சாத்திரபாடங்கேட்டனர். அப்போதிவர்க்கு பிரமசமாஜத்தலைவரென்றோர் அபிடேகவபிதானந் தோன்றியது. இவர் ஒவ்வொருதினமும் தமது திருமடத்திற்பூசைமுடித்து. இடையிலியோகபட்டம் கையிற்செபமாலை கரமாலை சிரமாலை முதலியன தாங்கியகோலத்துடனே அடுத்துவிளங்கும் ஸ்ரீசோமேசுரர் ஆலயத்தெழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சிவசண்முக தரிசனஞ்செய்துவந்த பின்னரே திருவமுதுகொள்ளும் நியதிவாய்ந்துவருகையில், இவர்குமாரர்கள் சண்முகம், நமசிவாயம் என்னுமிருவர்களுக்கும் கல்விபயிற்றியும் வந்தனர் பின்னர் சிலவருடங்களிவ்வாறேயிருந்து தமது 42-வது வயதில் ஐக்யமாயினர்.

அப்போது தமது குடும்பத்திலுள்ள சிறுவர் சிறுமியர்களை தமது மைத்துனர் மனிகுழந்தைவேலையரிடம் ஒப்புவித்தனர், அவர் இக்குடும்பத்தைமிகவருமையாய்ப்பாதுகாத்துவருகையில் சண்முகவையரின மையிலேயேகாலஞ்சென்றனர். நமசிவாயவையரென்பார் தமிழ்ப்பாஷைகற்பான்றொடங்கி, சொர்க்கபுரம், ஸ்ரீஇராமலிங்கத்தம்பிரானிடத்து அரியவிலக்கணவிலக்கியங்களைக்கசடறக்கற்றபின்னர் தென்னாட்டிற்சென்று திரிசிரபுரம் மஹாவித்துவான் ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் நட்புகொண்டு ஆரியதிராவிடபாஷாவிற்பன புலவர்திலகராய் நமசிவாயநாவலரென்னும்பெயர் பெற்றுவிளங்கினர் இவர்பண்ணுருட்டியில் தாபித்துள்ள தமதுபாடசாலையில் வித்தியாவிருத்தி நிலயம் என்றோர்சபையைத் தாபித்தனர் திருவிளையாடற்புராணப்பிரசங்கஞ்செய்து வந்தனர், சீகாளத்திபுராணம் முதலியன பலமாணாக்கர்கட்குப் பாடஞ்சொல்லிவந்தனர், இவர்எந்நாளும்நூலாராய்ச்சியிலேயேகாலங்கழித்தவர், பாடஞ்சொல்லும் வன்மைநன்கு வாய்ந்தவர் பிரசங்கங்கேட்போர் மனமுருகும்படி நயமாகச்சொல்லுபவர், தாம்மேற்கொண்டஆசிரமத்திற்குத்தக்கபடிதவம், சீலம்வாய்ந்து மிகவாசாரமாயிருந்தவர் இவர் பாடஞ்சொல்லுங்கருத்திலேயே காலங்கழித்தமையால் பெரியநூலொன்றுஞ் செய்தாரில்லை. ஆனால் திருத்தினை நகருக்கோர்பக்கமுள்ள மயிலாசலத்திற்கோர் சதகமுஞ் செய்தனர். மயிலாசலத்திற்குத் தலபுராணஞ் செய்யவேண்டுமென்பதிவருடையகருத்து அதுமுன்னமேபாடப்பெற்றிருத்தலால் அத்தலபுராணசரிதத்தையே பெரிதும் அடக்கிச்சதகமாகச்செய்தனர். தம்பப்பேட்டைப்பாளையமென்னுஞ் சோலையில் தவநிலையோடு தேவியுபாசனையால் வாக்கியச் செய்யுளால் பூதபவிஷியவர்த்தமானங்களையோதிய, சிவயோகியார். வீரசைவ அப்பாவையரவர்களின் மீதுதோத்திரமாக வகவற்பாவொன்றுபாடினர். இவர்சதகஞ்செய்த சின்னாட்கெல்லாஞ் சண்முகநாதனால் ஆட்கொளபட்டனர் இவர் கந்தர்சஷ்டிவிரதம்பூண்டு அத்தினத்தில் சோமேசுரர் ஆலயத்தெழுந்தருளி இருக்கும் சிவசுப்பிரமணியருக் கபிஷேகமாதிசெய்து மகேசுரபூசை செய்யும் நியதியைத் தந்தைபோலவே அனுட்டித்துவந்தனர், சண்முகநாதனால் ஆட்கொளப்பட்டபின்னர் மோனநிலையோடு வீற்றிருந்தனர். தாம், தெய்வலோகம் கந்தமாதனம்முதலிய பற்பலதெய்வநிலயங்களை, திருமலசாக்கிரத்திலேயே கண்டதாய்மோனநிலை நீங்குஞ்சமயத்திற்கூறுவர் இவர் தமது 52வது வயதில் ஏவிளம்பிவருடம் கன்னிமதி கிருட்டினபக்கத்தேகாதசித்திதியில் இஷ்டலிங்கபரசிவத்திற்

கலந்தருளினர் மணி குழந்தைவேலையரென்பாரும் மகாமதிகிருட்டிணபக்கத்தசமியிலயிக்யமாயினர், மணி. குழந்தைவேலையரின் அநுசர் சரவணமுத்தென்பார் கன்னிமதிபூருவ பக்கத்தேகாதசியிலடைந்தனர்.

இந்நூலாசிரியர். மிக்கவருமையாய்ச் செய்த இம்மயிலாசலசதகத்தை அச்சிட்டுவெளிப்படுத்த வேண்டுமென்ற, பணுருட்டி சிவசிதம்பரப்பிள்ளை புதுப்பேட்டை இருளப்ப செட்டி, இவர்கள் வேண்டுகோட்கிசைந்துபதிப்பிக்கலாயிற்று இவ்வாறேதமிழ்ப்பாஷையிலுள்ள ஒவ்வொருநூலையும் வெளிப்படுத்தின் எப்பாஷையினுமினிய நந்தமிழ்ப்பாஷை சாலத்தழைத்தோங்குமே? அவ்வாறுசெய்யச் சிவபிரான்றிருவருட்புரிவாராக. சுபம்.

வேலாசலநிலய சண்முகவேலாயுதன் றுதி.

மாதனத்தினைவிரும்பினும் வசிக்கமாடிகேணிலைமாளிகைமடுக்க [ட்
வோதனத்தினைவிரும்பினுமுடுக்கவுடை விரும்பினுமுவந்தணிகலன்க
பூதனத்தினைவிரும்பினும போகப்புகழ்விரும்பினும்புரிகுவைநீயே
வேதனைத்தவிர்தரிடுதிருவிலங் கற்பதிவிளங்கும்வேலாயுதபரனே.

இந்நூலாசிரியர் மாணக்கர்
மணி - அப்பாவையரால் எழுதப்பெற்ற
ஆசிரியர் வரலாறு முற்றிற்று.

---

## வீரசைவப்பெரியார் குருபூசைத்திருநக்ஷத்திரவிவரம்.

| பெயர். | தலம். | குருபூசை மாதம் | திதி அல்லது நட்சத்திரம். | ஐக்கியத் தலம். |
|---|---|---|---|---|
| சிவப்பிரகாசசுவாமிகள | துறைமங்கலம் | புரட்டாசி | பௌர்ணமி | நல்லாற்றூர். |
| சாந்தலிங்கசுவாமிகள் | பேறையூர் | ,, | ,, | பேறையூர். |
| குமாரதேவர் | விருத்தாசலம் | புரட்டாசி | பூர்வபக்ஷம் சதுர்த்தசி | விருத்தாசலம் |
| சிதம்பரசுவாமிகள் | மதுரை | வைகாசி | விசாகம் | திருப்போரூர் |
| சிவயோகஅப்பாவையர் | சோலை | மார்கழி | அஸ்தம் | தம்பிப்பேட்டைபாளயம் |
| நமசிவாய நாவலர் | பண்ணுருட்டி | புரட்டாசி | அமரபக்ஷம் ஏகாதசி | பண்ருட்டி. |
| மணிஐயர் | புதுப்பேட்டை | தை | ஷஷ்டி தசமி | பண்ணுருட்டி |
| இராமலிங்க சுவாமிகள் | சிதம்பரம் ஈசானியமடம் | வைகாசி | மகம் | திருவொற்றியூர். |

இன்னும்மற்ற குருபூசைநாட்களை அட்டவணையில் குறிக்கப்படும்.

14667
(6766)

இஃது
பண்ணுருட்டி போஸ்ட்மாஸ்டர்

## இராமசுவாமி ஐயர்

எழுதியது.

—:o:—

# INTRODUCTION.

This book though small in size is full of wisdom and truth extracted from the philosophical portion of the four Vedas. It is written in Tamil verse of exquisite beauty, and gives a charming account of the history of the Hill Shrine at Mailam. The author, Namasivaya Navalar Avergal, being a staunh devotee of God Subramania, has closed each stanza with a prostration at the feet of Him who shines in the shrine at the top of the Mailam Hill. It is said that the author had long cherished the idea of building a temple on the Hills of Velachalam for Subramania. But before his heart's desire was fulfilled, it pleased his Lord to remove him from the trouble and turmoil of this world to the everlasting bliss of His feet. One cannot help a tear gathering in his eye when reading the four stanzas in which he refers to that subject and implores Him for assistance.

M. R, Ry. M. Appavu Iyer, Headmaster and Manager of the Karunai Prakasa Vidyasala, Panruti, and a talented Tamil pandit took the trouble of collecting the original manuscripts left by the author and now publishes this sacred and useful book for the benefit of the world. He also hopes to accomplish the noble object which the pious author of the book had nearest his heart when he was living. As this book is to be destibuted free to the public. I hope they will extend their heartiest encouragement and co-operation to the publisher.

My thanks, as well as those of the public are due to the publisher M. R. Ry. M. Appavu Ayer for the untiring zeal he showed in bringing out this posthumous work of the late Namasivaya Navalar. I pray to God Subramania in my pujahs to bless him with strength to serve Him and devotion to attain Him,

தூமேனுந்தாரகவொண்பொருட்சிவனுக்
காமெனமொழிந்தேயநட்குருவானோன்
முருகன்குமரன்மூவிருமுகன்மான்
மருகன்சிவனருண்மைந்தன்கந்தன்
சூரசங்காரசுப்பிரமணியன்
வீரருள்வீரன்விரைகமழ்கடம்பன்
பயிலருமயிலைப்பண்ணவன்மீது
மயிலாசலசதகம்வாய்மலர்ந்தன
னன்னவன்பண்ணுருட்டியிலமர்ந்து
மன்னும்ரமச்சிவாயநாவலனே
இப்பாவலன்பாலின்றமிழுணர்ந்த
அப்பாவெனுவாகீசநாவலனச்
சண்முகன்பவனிதனைச்சிலேடையதா
யுண்முகநோக்கான்மொழிந்துரைத்தனனே.

Panruti. 8—4—11.

S. RAMASWAMI IYER,
*Postmaster Panruti.*

---

உ
சிவமயம்
திருக்கைலாயபரம்பரை பொம்மபுரம்

# ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர்

# பஞ்சரத்தினம்.

திருமேவாங்கு சண்ணியற்கடலோங்கு புண்ணியச்செம்மல் பாற்சேடமதனூற்; திருவுருக்கொடுவந் திவ்வுலகினிடையமர் வீரசைவ தேசிக செல்வமே;—கருமேவோங்கு முலகிலுறுகுரவர்போலா துண்டி கட்புலனிலும் நோக்குறாக்; கவினேறங்கு தெய்வங்களத்தனையும் மேனியிற்கலந்துற விளங்குபசுவீ;—னுருமேவாங்குபாலுணவு தன்னையே கொண்டுமா பதியீன்ற வொளிர்வேலனை; யோரிமையப்போது மறவாது பணிகின்ற யோ னுயபாலகுரு வடிவமே;—பருமேவோங்கு சோலைசூழ் பொம்மபுரிவாசனே பரிந்தெனக்கருள்செய்வையோ; பலஞான மற்றற்றவஞானமுற்ற சிற்சிவஞானபாலையனே. (௧)

விண்ணெங்குமே பசுமுகிற்றவழ் தருஞ்சோலை விறல்பெறுமுக் கண்மலையில்; விறலினிதிருந்தபெருமால் சித்தர்க்குமேமேவுசரணங்கள் அளியின்;—தண்ணெங்குமோங்கு பாற்றந்தம்மலை யணுந்தாயர் பாற் றேன்றிவாசுதத், தற்பரத்தவ சிகாமணியானமூர்த்தியே தண்ணளிய தூய சீர்தந்திடே;—வெண்ணெய்நல்லாடை சிற்கனச்சிவலிங்கம் வயங்குகண்மணிதாழ்வடம; மாசற்ற நறுமைபயோக பட்டமுடைய மாதேவ குருவடிவமே;—பண்ணைங்கும்விஞ்சையர்ப் பயில்பொம்ம புரியனைபரிகதெனக் கருள்புரிவையோ; பலஞானமற்ற நற்றவஞான முற்றசிற்சிவஞானபாலையனே. (௨)

சந்தமுறுபாற்கடற் றன்னேயோருமாசமாய்த் தண்மதிக்கழை கூந்தலுய்த்; தயங்கும் விளைக மழையதாய்க் கிரணங்கட்கயிறதாய்ச் சாரங்கொண்மகாடையாளனை;—சுந்தரச் சிவஞான பாலயக்குருதேவ சுவாமிபாய்த்தூய்ககரததாற்; றுகளறவெரித்தவ பரிசமேதவிண்மீன தாகத்துலங்குவ தெனச;—சிந்தைபிற சாரணர்நம் வழுத்தனையை வெண்பாவிறைசெய்தசெயமரா தரு; கேபரிசிபமிரகாசர் வாய்மொழி யையாண்டவன் வசனமயாங்கணடைந்தய;—பந்துமகல்வித்தனைய பொம்மபுரிவாசனை பரிகதெனக்கருள் புரிவையோ; பலஞானமற்ற நற்றவஞானமுற்றசிற் சிவஞானபாலையனே. (௩)

சித்தர்தவாதிஞர் யோகியர்ஞானி முதலியோர் திகழ்கரணமடைந்த டக்கிச்; செங்குன்றமுழையிடை மனமொடுக்கமிகொளச் சேர்ந்தருச வறச்சமாதி,—நிதமாய்க்காலத்தினை ளவிலலதாய்நீடிய நிலவு மனமொழிகடந்த; வின்மலபரசிவந்தனை யகமுறக்கொடு ஊழிற்ப ரனவேசெப்பிடும்;—முத்தராகியமதை முழையிடமதெனவே முன்னர்நீதவமிழைத்தே, மூயலிடமதாயொடுக்கஞ் சாணமேர்ந்தமை மூன்னர்யாஞ் செய்ததவமே;—பத்தர்துதிசெய்திடும் பொம்மபுரிவா சனைபரிகதெனக்கருள் புரிவையோ; பலஞானமற்றநற்றவஞான முற் றசிற்சிவஞானபாலையனே. (௪)

உன்னரியதெய்விக யோகருமொடுக்கமு மூவாழியண்மைய தனி; மேலாங்குபயடாலயத்துறை சண்முகன் றன்னையுமப்புடன் பணிசர ணரின்;—மன்னருமை புகழ்நலபிறமேறன்றல் புகழ்நலமடைந்துற தொண்டர்சீடர்; யாண்புதநமற்றபரிவாரிய செல்வமபுகழ்வண்மை பெறவேநாளுமே,—நினைவரிய திருவருள் விலாசந்தனைக்கருமநீள்கட த்திணையயாவகலவே; நித்தியபுத்தவானமறபபூரணக் குருநாதன் றூய பயவடிவாழ்கவே;—பயனரிய புகழ் யார் வாழ்பொம்மபுரியனை பரிக் தெனக்கருள்புரிவையோ; பலஞானமற்றநற்றவ ஞானமுற்றசிற் சிவ ஞானபாலையனே. (௫)

**மணி • அப்பாவையர் எழுதிய பஞ்சரத்தினம் முற்றிற்று.**

சிவசண்முகன்றுணை.

## மயிலாசலசதகமுதலியன அரங்கேற்றிய

# காலவிவரண விளம்பரம்.

ஸ்ரீ திருக்கைலாயபரம்பரை பொம்மபுரம் ஆதி, சிவஞான பாலயதேசிகர் தவம்புரிந்தருளிய மயிலாசலத்தி லெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ சிவசண்முகநாதனைச்சுட்டி பண்ணுருட்டி ஸ்ரீ நமசிவாயநாவலர் அவர்களாற் செய்தருளிய சதகத்தையும் எயமாற்செய்தருளிய பவனிச்சிறப்பையும் நிகழும விரோதிகிருது௵ வைகாசிமீ ௩௳ குருவாரம் பகல் 11-மணிக்கு தறகாலம் அத்தலத்தில் வீற்றிருந்தருளும் ஸ்ரீ சிவஞானபாலயதேசிக சன்னிதானத்திருமுன்பு அறங்கேற்றப்பட்டன. அன்று பகலில்'' அம்மயிலாசலத்தி லெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சண்முகநாதருக்கு அபிஷேகமாதிய சோடசோபசாரத்தீபாராதனைக்காட்சியும் இரவில மேளவாத்தியங்களுடனும் பரதநாட்டியங்களுடனும் மகோற்சவக்காட்சியும் மிகவிபவமாய் நடந்தேறின. ஷை மீ 27௳ பொம்மபுரத்தில் மகா குருபூசைக்காகச் சுவாமிகட் செலுத்திய திருமுகப்பத்திரிகை யொன்றினைப்பூசித்து வாசித்துணர்ந் தங்ஙனம் ஷை சிவஞானபாலயதேவரைச் சுட்டிப்பஞ்சரத்தினம், குருதரிசனவிளக்கம், என்னும் இரண்டு பிரபந்தங்களைசசெய்து கொண்டுசென்றனம். ஆண்டு நடைபெற்ற மகேசுரபூசையின் மிகுதியும் அன்றிரவில் மயில்வாகனத்தில் எழுந்தருளிவந்த சிவசுப்பிரமணியர் காட்சியும் ஆதிசிவஞானதேவர் பாவனையாய் தற்சமயம் பதினைந்தாவது பட்டமாக இப்போதும் விளங்கும் சிவஞானபாலய குருமூர்த்தியைவெள்ளிவிமானத்தி லெழுந்தருளுவித்துபட்டினப்பிரவேசமாய் அற்புதமான பாணவேடிக்கை வாத்திய கோஷ்டங்களுடன் உலாபோந்தகாட்சியும் உலாப்போதருங்கால் இடையில் கட்டியம் நெஞ்சுவிடுதூது முதலியபாடிய சாம்பிரதாய அநுட்டானகாட்சியும் தரிசித்து பின்னர் அன்றேயாமியற்றிய பஞ்சரத்தினம் குருதரிசனவிளக்கம் என்னும் இரண்டு பிரபந்தங்களையும் அரங்கேற்றினம் இன்னோரன்ன சமயங்களில் ஷை குருசுவாமிகளே உவகை கொண்டவுளத்தாய் தேககரண பிரயாசை நோக்காது முன்னின்று முயன்று

செய்தருளிய †பிரபுத்துவ சாமர்த்திய பெருந்தன்மைக் குணத்தினை நினைதொறும் நினைதொறும் மனங்கசிந்துருகலின் அன்னோரின் உபய பொன்னடிகளிரண்டினையும் எம்மன்முடிக்கோ ரணியாக்கிக்கொண்டு சாஷ்டாங்கமாகச் சரணம்புரிந்தொழுகாநிற்கும் ஷை ஆதீனத்து வித்துவான்

மணி. அப்பாவையர்,
கருணைப்பிரகாச வித்தியாசாலைத்தலைவர்,
பண்ணுருட்டி.

† ஞான அரசு செலுத்தி,—அரசவைப்பதினு மதிசயித்த சம்பத்தில் விளங்கும் திருவாவடுதுறை முதலிய ஆதீனங்களில் தம்மா தீனத்துக்கல் வியாளரைக் கௌரவப்படுத்தவேண்டி பீதாம்பரம் அளித்தல் முதலிய உதாரகுணப்பிரபுத்துவகுணச்செய்கை போல் இப்பஞ்சரத்தின மரங்கேற்றியஞான்று நடாத்தியதாற் பிரபுத்துவகுணமென விதந்துரைத்தமையறிக.

ஆசிரியர் நமசிவாயநாவலரிடத்தும் அவரியற்றிய
மயிலாசல சதகத்திடத்தும் அன்புவைத்தபிமானித்தார்
பெயரட்டவணை.

## பண்ணுருட்டி

தி. அரங்கசாமியுடையார்
வெ. மாணிக்கவுடையார்
தானி. கிருஷ்ணவுடையார்
தியாகராஜவுடையார்
குட்டி-இராஜகோபால்வுடையார்
கிருஷ்ணவுடையார்
துரைசாமியுடையார்
திருவேங்கடவுடையார்
கோபாலபடையாச்சி
ரு. கோவிந்தசாமி நாய்க்கர்
மொட்டைய நாய்க்கர்
தனபாலுராமசாமி செட்டியார்
ஐயாசாமி நாயக்கர்
தம்பாப்பிள்ளை
கு. தங்கவேல் பிள்ளை
வெங்கடாசல செட்டியார்
சுப்பராய செட்டியார்
சாமிநாதப் பிள்ளை [ண்டி
இரங்கசாமி பிள்ளை புகையிலைம
சாமிகண்ணுவுடையார்
வேலுசாமி செட்டியார்
லா. குப்புசாமி செட்டியார்
இராமசாமி செட்டியார்
பச்சையப்ப செட்டியார்
வெங்கடாசல செட்டியார்
மா. நாராயணசாமி செட்டியார்
சிவராமையர்
தம்புசெட்டியார்
வா. முனிசாமி முதலியார்
இரத்தின முதலியார்
சலவா ரங்கைய செட்டியார்
கு. நடேசவுடையார்
தில்லை முத்துப்படையாச்சி
பள்ளிகூடத்தா படையாச்சி
நாராயணசாமி படையாச்சி

நாராயணசாமி நாய்க்கர்
கிருஷ்ணசாமி நாய்க்கர்
முத்துசாமி செட்டியார்
துரைசாமிப் பிள்ளை
இரத்தின செட்டியார்
சொக்கலிங்க செட்டியார்
சென்னை அப்பாசாமி முதலியார்
வரதராஜ பிள்ளை
பாப்பு செட்டியார் நெல்மண்டி.
வ. சண்முக செட்டியார்
அழகிநத்தம். சண்முகவுடையார்
சிவக்கொழுந்து வுடையார்
ப. வெ. வெங்கடாசலசெட்டியார்
பா. இராமசாமி செட்டியார்
சொக்கலிங்க செட்டியார்
நடேச செட்டியார்
நரசிங்க செட்டியார்
கு. இரத்தின செட்டியார்
வைத்தியலிங்க செட்டியார்
சேஷமாதவ செட்டியார்
கருப்பண்ணசாமிப் பிள்ளை
பால. இராமசாமி செட்டியார்
வாழப்பாந்தல்-சுந்தர செட்டியார்
மாம்பாக்கம் வாத்தியார் நடேச
செட்டியார்
வைத்திலிங்க செட்டியார்
நெல்மண்டி நாராயணசாமிபிள்ளை
பேட்டைவீதி நாராயண செட்டி-
இராமலிங்க செட்டியார [யார்
முத்துசாமிப்பத்தர்
ப. மு. மு. அப்துலகரீம் சாயபு
கொண்டல்வராய செட்டியார்
கோபாலமாணிக்க செட்டியார்
அகரம. கந்தசாமி செட்டியார்
ஷேடி இராமசாமி செட்டியார்
சிங்காரவேலுப் பிள்ளை

சிவ மாணிக்கச் செட்டியார்

## இலிங்காரெட்டிப்பாளையம்.

சொ. குப்புசாமி செட்டியார்
இருளக்குறிச்சி சிதம்பர செட்டியார்
ம. துரைசாமி செட்டியார்
பாபனபட்டு இராஜகோபால்செட்டியார்
இளயா-இராஜாகோபால் செட்டியார்
விரட்டலிங்க செட்டியார்
குப்பு செட்டியார்
பு. மாணிக்க செட்டியார்
நீலகண்ட செட்டியார்

## தேவக்கோட்டைநகரத்தார்.

இ. ரு. ம. இ. சுப்பிரமணியஞ் செட்டியார்.
ப-ள - வெ- ரும் இலட்சுமணஞ் செட்டியார்
பெ. பெ ரி. வெள்ளையஞ்செட்டியார்
அப்பு. லெ. ராமசாமிசெட்டியார்
வீர-ராம-அ-ரு-லட்சுமணஞ் செட்டியார்
சோ-ம-அண்ணாமலை செட்டியார்
பெ-பெ-ரி-சு-சோமசுந்தரஞ் செட்டியார்
விழுப்புரம் இரத்தினப் பத்தர்

## புதுப்பேட்டை.

பெத்து செட்டியார்
சபாபதி செட்டியார்
நமசிவாய செட்டியார்
பாப்பு செட்டியார்
பர்வாடை செட்டியார்
ஏகாம்பர செட்டியார்
திருமலை செட்டியார்
தேசி செட்டியார்
குரு வெங்கட்டராயசெட்டியார்
திட்டைகுடிவீரண்ணசெட்டியார்
தாண்டி செட்டியார்
வாடாமலைபெருமாள்செட்டியார்
சுப்பராய செட்டியார்
சங்கு-சீனிவாச செட்டியார்
பட்டணம் அருணகிரி முதலியார்
திருவாரூர் பாப்புசெட்டியார்
சிவாபட்டனம் இராமலிங்க நாய்க்கர்
தாணூர் கிருஷ்ணசாமி நாய்க்கர்.
பட்டிணம் அருணகிரி முதலியார்
வெள்ளையங்குப்பம் அடுத்த புதுப்பேட்டை பரசுராம படையாச்சி
ஆண்டிக்குப்பம்-ஜெகந்நாதபடையாச்சி
திருநறுங்குன்றம் - சர்க்கரையா- சுந்தர வுடையார்
சென்னை - பொன்னுஞானம்பம்மாள்
சின்னையா பிள்ளை

† ஆசிரியர் தோன்றாத்துணையாய்த்தமது திருமாளிகையில் வீற்றிருந்தகாலத்துதி அரங்கசாமி வுடையாரென்பார் தமது இரகத்திற்கழைத்துசென்று உயர்ந்த ஆசனத்திலெழுந்தருளுவித்து பொட்டைகிராப் திருவுருப்படம் எடுத்துவழிபட்டனர் பின்னர் முத்தியசெட்டியார் மருகர் இராமசாமி செட்டியார் என்பார் அப்படத்தைக்கொண்டு பல படங்களெடுத்து திருவுருமறைந்த காலத்துவழிபட்டனர்.

உ

சிவமயம்.

சிவசண்முகன்றுணை.

14667
(8766)

# மயிலாசல சதகம்.

காப்பு - வெண்பா.

பூவெண்கயத்தூரும் புரந்தரனே முதலாய
காவெண்புலத்தாரைக்காத்தளித்தக் — கோவண்
மயிலாசலவேண்மேன்மாசதகஞ் செப்புதற்குப்
பயிலார்கோட்டைங்கர கண்பார்.

விருத்தம்.

திருமணத்தாரிதழிசெஞ் சடைப்பரசிவன் றிகழ்கந்தமாதனத்
திற்; றிசைமுகன் சிறைகண்டு மீட்கவருணந்தியைச் செலுத்திமுடி
யாமை யோர்ந்தே; — பெரியவிடை மீதெழுந்தருஞ் சிறைவிடுத்தயன்
பிழைதனைச் செப்பவென்றே; பிரியமொடெடுத்து மடிமீதணைத்திட்
டபின் பேசிதன்றந்தைதன்றன்; — திருமுடித்தாழ்த்தியிரு மந்திரப்
பொருடனைத் தெளியவுணர்வித்தகுருவே; திங்கடனை வென்றமுக
தெய்வகுஞ்சரியுடன் றிகழுகுறக்கொம்புமிருபால்; — மருவவரியணை
யினிற்பாலையானந்தகுரு பர்வவீற்றுறுமயிலனே; மயிலைகண்படுகம
லவயலை கண்டுறைநாரை மயிலைசண்முகதேவனே; — (க)

(இதுவுமது)

உலகுபலவுஞ்சராசரமு மீன்றிட்டவோருத்தமச் சிவநாயகிக்;
குணாநற்புகழ்மைதனை யோதிஞனறனெளிதுரைக்கவுன் மகிமை
யெளிதோ; — குலவுமுடியோராறுபன்னிருபுயாசலக்குரிசினின் குரை
கழற்காற்; குற்றேவலுஞ்சிறிய கொடியனுக்கெய்துமோ கொண்ட
டிமை யாண்டருள்வையோ; — இலகுநவசத்திமாருந்துயிலுதித்த நவ
வீரர் புடைசூழுமிறைவா; விசைநாரதப்புலவன் மகத்தினிற்றோன்று
தகரேறி விளையாடுவேலா; — மலைவிலாநந்தி கேசுரனெஞ்சுசமுகனே
மலைமங்கை கொஞ்சுமுகனே; மயிலைகண்படுகமலவயலை கண்டுறை
நாரைமயிலை சண்முகதேவனே; — (உ)

## வேதியர் சிறப்பு.

ஒடுங்குமப்பேரூழி காலத்துநிலைநின்று மோங்குபரசிவமைம்மு
கத்; தொருநான்குவாக்கினிற் பற்கிளைகளோடுதித்திட்ட நான்மறை
முற்றிலும்;—திடம்பெருந்தங்கணு வொன்றினலாய்ந்துளத்தெளிக
ருவியாலளக்குந்; திறலினோர்விதிவிலக்கறிந்தொழுகு மறையோர்கள்
செயலினைத்தாமெடுத்துக்;—கடம்படிமுளைத்தில் குகண்ணுதற்றென்
றூடு காவல்குணபூடணற்கே; கருத்துறத்தெரியவைத்தா ரென்னில
வர்பெருமைகண்டுசொற்றிடவுமெளிதோ;—மடங்காதவன்புளத்தொ
ண்டர்தம்மிடரெலா மடக்கும்வடிவேலரசனே; மயிலைகண்படு கமல
வயலை கண்டுறைநாரை மயிலைசண்முகதேவனே. (௩)

## அரசர் சிறப்பு.

அறிந்துவரசர்க்குரிய கலைகள்கற்றொழுகுவாரற நீதியணுவும்வ
ழுவா; ரரியவேதாகமத்தலைவரொடு முனிவர்நல்லறிவாளர் மூப்பர்த
மையும்;—குறைவுறுக்காத் தளித்திடுவர்துலை முட்போற்கோணாத
நாவுமுடையார்க்; கூர்தெய்வநிலைதனைக்கடந்திடார்துட்டர் தங்குறை
கண்டொறுத்துமிடுவார்ச்;—சிறுமையோரிடத்துமிகதயை நேருசிந்
தையார்ச்செறியமரிலுயிர்க்கு மஞ்சார்த்; தேவாலயத்துருபு மூன்ற
துங்குறையாது சிறப்புடனடத்திவருவார் ;—மறுமைப்பயன்றருங்
கருமங்கள்கைவிடார் மகுடமுடியரசர்தாமே; மயிலைகண்படு கமல
வயலைகண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (௪)

## இராஜ சமுகம்.

பின்னுமுன்னோக்குறுஞ் சூட்சியுளமந்திரிப் பிரதானியர்களொ
ருபாற்; பெற்றிபடைவீரர்சாரணர் தூதர்புரோகிதர்ப்பிறங்கு வாக
டபண்டிதர் ;—துன்னவொருபாலினன்னி மித்திகப்புலவருந்தூய்
ஞானநூற்பெரியரும்; தொல்லிலக்கண முடனிலக்கியத்தேர்ச்சியுள
சுகபுராணிகருமொருபால்;—நன்னர்சுபமங்களப் பல்லாண்டுகூறிடும்
நாடகப்பெண்களொருபா; னன்குதிறைகொண்டுவந்திடுராஜ தொகு
தியுநற்சமையநோக்க வொருபால்;—மன்னவரியணை யிருந்தரசுபுரிச
முகமே மகாராஜராஜர்சமுகம்; மயிலைகண்படு கமலவயலைகண்டுறை
நாரைமயிலை சண்முகதேவனே. (௫)

## வைசியர் பெருமை,

காரியங்கண்டு செலவிடுவார்கள வலத்திற்காசொன்று முதவி
டார்கட்; கடுகளவதாயினும் நாணயப்பழுதுறார்க்கண்டளவு சொல்ல

வொண்ணச்;—சீரிலகுசம்பத்தராயினுஞ் செருக்குறார்ச்சிறந்த முக்குலத்தர்தேடுஞ், செய்யபொன்னவரகத் தொருசிறுவிருந்ததாஞ் செம்பொனிலையவரில்லமே;—பாரிலகுகூடலிற் சிவக்கொழுந்தயிடேகபாண்டியர்க்கரதனங்கட்; பகர்தற்குவணிகனுய்வந்த தேவைசியர் பரவுபுகழ் விளங்கவருமே;—மாரிலகுகடம்பினற்றுரா யென்வினையெலாமாற்றி நீருக்க†வாராய்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரை மயிலைசண்முகதேவனே. (௬)

## வேளாளர் சிறப்பு.

பெரியோர்கள்கையிலொருநாள் செயுந்தருமமது பெரிதுறவளர்வதுபோற்; பிஞ்ஞகன்றன்னடியர் விருந்தினோதிதியர்ப்பிறங்கு மற்றெவர்கட்குமே;—பரிவுபதினாயிரம்பேர்க்கு நாளொன்றுகபல்காற் படைத்துவரினும்; பகருமேற்பாகமுங்குறையாத நெற்குவைப்பயன் கொளும்வேளான்றிறம்;—செரிவுறக்கூட விறைசோதித்தரிந்திடிற் செப்புமவர்வண்மையெளிதோ; திகழ்கங்கைகுலசீலர்வாழ் விஞலல்லவோதிறலரசர் கோல்வாழ்வுமே;—மருவிநின்றுளிணைகள் கண்டுபூசிக்கவிம்மடமையேற்கருள் புரிவையோ; மயிலைகண்படு கமலவயலைகண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (௭)

## நால்வராதிய மற்றைய நாயன்மாரையும் வழுத்துதற்கு அருடருமெனல்

மண்ணினிற்றென்னுடு செய்தவப்பேற்றினுன் மாசைவனைபங்கூழ்தனை; வஞ்சகப்பரசமைய புட்களாற்கோதாதுமாற்றி நீறளித்தவேந்தைக்;—கண்ணதாற்காணுக் கொடுஞ்சமணகன்றுசிவகாட்சி கொளுநாவேந்தரைக்; காரிகையிடத்தவாவைத்து மெய்ப்பேரின்புகைக்கொளாரூரர்தமையும்;—நண்ணரியதிருமுடியின்மண்ணுடைப்பித்திடவுநவின்றவாசகவள்ளலை,நவிற்றருந்திருவடித்தொண்டினுல்வீடுற்றநாயன்மாரவர்தம்மையும்;—மண்ணிலெவரெனினுமேமறவாதவவரையான்மறவாதிருக்கவருளாய்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௮)

---

† வாராய், என்று இந்நூலாசிரியர்க் கூறிவேண்டியவாறே வந்தாட்கொண்டமை சரிதத்திற்காண்க

சங்குகர்ணனென்னும் சிவகணநாதன் பூமியின்கண் நரனுயவதரிக்க நேரிட்டமை.

பூமுடிகொள்சேடனும் புகலரியவற்புதப் புகழ்மைநிறைகைலை வரையிற்; பூவெலாந்தந்தமாதேவி நீராடடப்பூம்பொழிற்றடமொன்றினைத்;—தாமிமைத்திடுமுனம்நியமித்தினந்† திரிபுதாமரைப்பெண்களான்றித், தருநகர்ப்பெண்களொடு சென்றுமிவணெவருமே சார்ந்துறு திருத்தியென்னு;—மோமென்றும்மந்திரம் புகல்சங்குகரணனையொளிர்கடைக்காவலுய்த்தே; வொண்டடத்தாடும் போதரன்வரலுமுமையொளிந்திடக் கணையனல்;—மாமலைமகட்செயுமிஃதுணர்ததாமையால்மகனுறி பெயற்றனனிதே; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௯)

சங்குகர்ணன் இதற்குப்பரிகாரம் எப்போதெனப் பணிந்திறங்கல்.

நாரிக்கிணங்கவொருபால்தரும நா[redacted]ணைமலர்த்தாட் பணிந்தே; நாயினேன்பிழையெலாம் பொறுத்துநசசாபமென்னை நலியாதகற்றவென்றே;—யாரப்பிதழிரூன்னிரங்கு கணநாதனுக்கருளுவன் புறநெறியெலா; மகற்றிமெய்வீறுறுஞ் சைவத்தினருமை நெறியவனியிற்றழைத்துமிரச்;—சீருற்றிலகு வேதாகமத்துளவான செம்பொருடனைத்தெரித்துஞ்; ஜெயபேரிமுழங்கநுஞ்சைவத்தனிக்கொடித் திசையோங்கவாண்டதன்பின்;—மாரிற்கடம்பனொடு செருப்புரிந்தெமதருருவின்மன்னுவாயென்றனனரோ; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (௧0)

சங்குகர்ணன்பாலசித்தனுய்க் கடலில் அவதரித்தமை.

முக்கணுடைகடவுளிவ்வாருரைத்தெழுந்தபின்மூதறிஞசங்குகர்ணன்; மொழியரியதுயர்செயுந்தாய் வயிற்றுறிலென்றுணர்ந்துமுந்நீரிடத்தே;—செக்கரஞ்சடைமுடியுமிலக மெய்ச்சிவலிங்க தாரணஞ்செபமாலைசேர்த்; தெய்விகசெந்துகிற் கண்மணித்தாழ்வடஞ் செவிதனிலுமாறுகட்டி; மிக்கவெழிலரையினிலிலங்கோடுநாவினுன் மேலைந்தெழுத்தோதலும்; மேனிநீற்றொளிவிடக்கற்பபொக்கண காமுமேயவயதொருபத்ததாய்;—மக்கள்போல்வந்தநற்றவபால சித்தனடிமறவாதிருக்கவருளாய்; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (௰௧)

† இனந்திரிபு தாமரைப்பெண்கள். திருமகள்-கலைமகள்.

14667



### கடற்கரையில் ஆச்சிரமங்கொண்டு பின்பெருமுக்கல் முதலாய ஸ்தானங்களிற் சென்று ஆங்காங்குள்ள சித்தராதிகளுக்கு அருள்ஞானம் பாலித்துவந்தமை.

*கீழ்கடற்கரையண்மியதனருகிலுயர் பொழிற் கிட்டியவணுறை சித்தரின்; கேண்மையுறுகுருலிங்கசங்கமத்தியலெலாங்கிளர்த்திபல சித்தியற்றித்;—தாழ்விலடியர்க்கோதிவருகையிற றக்ஷணாமூர்த்திதா னிவ்வடிவதாய்த்; தரணிவந்துற்றதோவெனவியப்புற்றுவச் சத்வகுணசித்தரெல்லாம்;—வீழ்பலச்சித்திவயதொருபதின்விளங்கலாலெழிற் பாலசித்தனென்றே விளம்பிடத்திருநாமமது பெற்றுமவருடன் வீறுபெறுமுக்கன்முதலாய்;—வாழ்சித்தர்மேவிடந்தோறு முற்றருள் ஞானம்வழங்கிவந்துற்றனனரோ; மயிலைகண்படு கமலவயலைகண்டுறைநாரை மயிலைசண்முகதேவனே.* (௰௨)

### மயிலாசலத்தைப்பற்றி நாரதமுனியால் சொல்லத்தெரிந்துகொண்டு பாலசித்தன்மயிலையங்கிரிக்கு வந்தமை.

*முன்னிருந்திட்டவாச்சிரமத்தில்வந்துமே மூதறிஞர்போற்றவாழ்நாண்; முனிநாரதப்பெரியன்வந்துறக்கண்டு மிகுமுகமன்மங்கலம்வழங்கத்;—தன்னுளமகிழ்ந்துமுனிசித்தனையுநோக்கிமேற்சார்பிலொரு மயிற்சைலமாய்த்; தகையுறக்கொண்டாறுமுகற்குவாகனமாக தவம் புரிந்துறைவதென்றே;—பன்னிமுனைதருதிமூலமுந்தெருட்டிதற்பாங்கர்விடைகொண்டபின்னர்ப்; பரிவுகொண்டருட்பாலசித்தனடியாரொடும்பரியமயில் வரையுற்றுமே;—மன்னுகிரிமீதேறி சுனையாடிசிவபூஜைவரன்முறைமுடித்தனனரோ மயிலைகண்படுகமலவயலைகண்டுறை, நாரைமயிலைசண்முகதேவனே,* (௰௩)

### மயிலையங்கிரிக்குவந்து தவஞ்செய்கையில் பாலசித்தருக்கு வள்ளிதெய்வயானையார்வந்து தரிசனந்தந்து அருள்செய்தமை.

*முடித்துமொருமுப்பதோடைந்தாண்டருந்தவம் முருகவேடனைக்குறித்தே;முயன்றுதற்குருமையால்வள்ளிதெய்வதயானைமுண்டகத்தாணிணைந்துத்;—தொடுத்தனன்பின்னுமாதவமு நம்மன்னைமார்த்துணைவனனுமதியுமின்றிக்; தோன்றியச்சித்தனெதிர் கண்டுமகிழ்கொண்டடிகடொழுகவே தேவியர்களு;—மடுத்தனம்நின்னரியநோன்பினாலென்றுதிருவருள் புரிந்தங்கணமர; வற்புதச்சித்தனொருதந்தை*

போலன்புவைத் தருங்சந்தமூலாதிகள்;--மடுத்திடக்கொணர்ந்துவற்பித் துவரவக்கிரியின் மன்னிநிலைபெற்றனன்றோ; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (௰௪)

### மனைவியரைக்காணாமல் கந்தவேள்சைலையங்கிரியைவிட்டு மயிலையங்கிரிக்கு வந்தமை.

அடித்தொண்டுசெய்துவரு சித்தன்முகநோக்கியிவணரனரிப்பிரமரேனு மடைவுறிற்றடுத்திடென்றதிகாரமதுதரவுமறுமுகப்பன்னியர்கடம்;-கொடித்தலைக்கடைவாயில்சித்தனுங்காவல்பூண்டொழுகுநாட்குலவுவெற்பிற்; குமரவேடேவியர்களெங்கணுற்றனரென்று சொற்றமேலுலகமன்றிப் ;-படித்தலமெலாந்துருவிவருகையிற்பெண்ணைவடபான்மயிலைவரைகண்டிதிற்; பாரியரிருப்பரென்றுணர்ந்துமொருவரசனுப்படிவமுற்றேறினனரோ;—மடித்தலஞ்சிவையெடுத்தணைத்திடும்வள்ளலென் வல்வினைகளொழித்தருள்கவே; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (௰௫)

### முருகவேள்பால சித்தனோடுயுத்தஞ்செய்து அவரது சாபம் நீக்கி பின்பு அவருடன் உட்சென்று மனைவியரைக் கண்டமை

வெள்ளிவெற்பிறையுமுற் புகன்றமொழிமுற்றநம்விசாகனுட்புகுதாவணம்; விளம்புறுஞ்சித்தனோடுபோர்புரிந்தெய்த்துபின்வெகுமல்லயுத்தஞ்செய;—வுள்ளத்தின்முருகவேளென்றுணர்ந்தெமதுமெய்ச்சித்தர்கோனுறுதுதிசெய; வொருகோடிருத்திரக் கணங்களிற்றவத்தினாலுயர்சித்தவெங்கைதபுகலுந்;—தள்ளருஞ்சாபம்நாம் நீக்கினேமினியவேதாகமத்திருமுறைகளும்; தகைமைமெய்ச்சைவமுந்தழைத்திடச்செய்திவண்டங்குவா யென்றெடென்றே;—வள்ளல்வேற்குகனருளியுட்புகுந்தரிவையர்கள்மகிழ்வுறக்கண்டனனரோ; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே. (௰௬)

### சுப்பிரமணியசுவாமி வள்ளிதெய்வயானையாரைத் திருமணஞ்செய்துகொண்டு மயிலாசலத்தில் வீற்றிருந்தமை.

தொண்டர்கள்புரிதவத்தாலிங்குமாலயற்சுடர்முடித்தேவாதித்; துலங்குமெத்தேவருந்தோகையர்களுடனாக தொடர்ந்திடச்சேவேறியு;—மண்டர்நாயகனுமையும் வந்திடச்சித்தனாலரு மணச்சபையிறத்த;மனித்தபின்திருமணமுடித்துநங்கந்தவேளரிவையர்களுடன்மருவியே;—பண்டுசொன்முறைமையாலருந்தவச்சூர்மயிற்பருப்பதத்தமர்

ந்தருளினன் ; பரவுவோரிடர்களைந்திடு தொழிற்குரிசிறன்பாலவினையாடலதனை ;—மண்டலத்தவருநஞ்சிந்தனற்கண்டு களிமருவினர்கள்சகமுமாதோ; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை நாரைமயிலைசண்முகதேவனே. (௰௭)

### சுப்பிரமணிய சுவாமிசித்தராச்சிரமத்துக்கு எழுந்தருளிஅவர் சீடருக்கு குருபட்டந்தரித்துப்பின் மயிலையங்கிரிக்கு வந்தமை.

சித்திதருசிவஞானவின்பங்கிளைத்தலாற் சிவஞானமென்றியம்பிச்; சிவிகையொன்றளித்தரிற் சித்தரிறைவேண்டுகோட்செயலறிந்துடனெழுந்து;—வுத்தமச்சித்தராச் சிரமத்தினெழின்மையாயோங்குதிருமடத்துண்மேவி; யுரைத்தமுறைசத்தினிப்பாதவிதமதுகண்டிலாதிதருசீடரைக்,†—குத்தமச்சமையாதிதீக்கைகட்புரிந்தவர்க்குரியமும்மலங்குறைத்துக்;குணமாகுமுத்திக்கருகராய்ச்செய்பரமகுருபீடபட்டந்தனை ;--மத்தமிற்சித்தர்தஞ்சீடனுக்களித்துபின்மயிலைவரையுற்றனனரோ மயிலைகண்படுகமலவயலைகண்டுறை நாரைமயிலைசண்முகதேவனே. (௰௮)

### சிவஞானபாலையசுவாமி கண்மான்மியம்.

அகச்சமையமோங்கிடப் புறச்சமையவிடரெலாமகற்றிலிங்காகஷிட்டை ;யடைவுறச்சீடருக்கருள்புரிந்துலகெலாமல்லமன்னியக்குசைவம்;--மிகவுறச்செய்தநஞ்சிவஞானதேசிகன்விளம்புமைந்தாறுண்டுகோல்; விளங்காறுமுகதேவனுடனுறைந்திருந்துபின்வேலர்தன்றென்பாங்கரிற்;—சகலவுலகும் பரவசிவலிங்கவுருவதாய்த் தயங்கிநிலைபெற்றனனிவண்;சாற்றருஞ்செந்திலிற்செருக்குண்டிருந்தகவிச் சதுரனொருவனையும்வென்ற;—மகத்தான நஞ்சிவப்பிரகாசர் துதிசொலும்வள்ளலவர்பெருமையெளிதோ; மயிலைகண்படு கமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௰௯)

### மயிலாசலத்தின்றீர்த்தத் தொகை.

சீர்கிழக்கிந்திரன்றீர்த்தமுந் தென்கீட்டிசைபாலசித்ததீர்த்தஞ்; செந்தழற்றேவனுற்புரிவன்னிதீர்த்தமுந்தென்றிசைத்தருமதீர்த்த;-- மேர்மிருத்திடுநிருதிதிசையினன்னிருதி நதியெழிற்குடக்கின்வருண

---

† குத்தம்-இரட்சித்தல்

மா;—மியம்புவடமேற்றிசைக்கோன்வாயுதீர்த்தமாமினியவடதிசைய தனகண்;—பார்புகழ்க்குபேரனதுதீர்த்தமாநம்மீசற்பாங்கரீசானதீர்த்தம்; பரியமயில்வரையடியில்வள்ளிதெய்வதயானைதீர்த்தமும்பாதகமெலாம்;—மாரச்சனைசெய்குமரதீர்த்தமொடு தீர்த்தங்கண் மன்னு பதினொன்றுகுமால்; மயிலைகண்டுபடுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (உ0)

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்துதி.

ஆகுநற்கலையுருவமாமகட்புகுதற்குமஞ்சமுச்சங்கத்தினு; மருந்தமிழ்க்கொருதலைப்பெரும்புலவராய்வந்தகப்பொருடனைப்பகர்ந்த;—வேகயாஞ்சயஞ்சிவப்பிரகாச மொருவடிவெடுத்த வனியெய்தினனென; வெண்ணுறப்படியில் வந்துற்றநிற்காண்டிடின்○வெருகெதிர்க்கிள்ளையதுபோல்;-சோகிததிருப்பதிலுமறைவுற்றிருப்பதேசுகமெனக்கருதிதானே; துலங்குநூலகத்தியன்வான் மீகிசேடனீதோன்றுமுன்மறைந்தபான்மை; மாகத்தருங்கவிப்புகழ் சிவப்பிரகாசமன்னனின்னடி×சரணமே; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (உக)

திருநீற்றின்வகை.

உலகத்துயிர்க்கெலாமிகபரத்தின்பங்களுதவுவெண்டிருநீறது;வோதரியகற்பமனுகற்பமுபகற்பமேல்வுரியவகைமூன்றுள்ளே;—யிலகுநற்கோமயந்தரையில்விழுமுன்னரேவெள்ளிபொற்றகடிதலா; லெழின் முளரியிலேபிலு மேந்திசொல்வில்வங்கவர்ந்தினிதின்விளைவித்ததே;—நிலவுநற்கற்பமாம்வில்வங்கணீக்கியதி லேந்திவிளைவித்ததுவு; நிகழுமனுகற்பமாந்தரைவிழுந்திட்டபினியமித்ததுபகற்பமாம்;—மலினமறுநீற்றினைச்சிந்தையுற்றணிவோர்கண்மாத் துயர்க்கடற்கடப்பார்;—மயிலைகண்படு கமலவயலை கண்டுறைநாரை மயிலைசண்முகதேவனே. (உஉ)

---

○ வெருகு-ஆண்பூனை

× மரபிற்கிணங்கச் சரணங்குறித்தனர்.

## திருநீற்றின்மான்மியம்.

கூடலிற்சமணரைக் கழுவேறவிட்டுகோன் கொள்சுரதனொடு கூனையுந்; தொலைத்துமெய்ச்சைவநெறியளித்ததும் புத்தரைக்கொண்டு கற்செக்கினிடையி;—லாடியேசெம்பியன்சைவவைபோகத்தையடைந்திடச்செய்ததுவு; மனபுமெய்ப் பொருள்வேந்தை முத்தியிற்சேர்த்துமோரசுரன்முற்பவம் விளக்கி;—நாடருநதெய்வீகமேனி யொடு மேற்சுகம் நயந்தளித்ததுவுமிழிய; ஞமறைப்பதிதனைச்சிவபுரியினுய்த்ததுமநங்கையொடுபுயபெலற்கு;—வாடுறக்குறைந்தவுருநிறைவுறச்செய்ததும் மாட்சிதருநீறல்லவோ; மயிலைகண்படு கமலவயலைகண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (உ௮.)

## இதுவுமது.

வேகாதிருத்தன் மிகுவெநதுமேகரிந்ததும் வெளுநீறின்றிமழுப்புநிறபாய்; விளங்குமிநநீறெலாந்தரித்தலாகாதென்று விளம்பிடுஞ்சிவாகமங்கள்;—போகாதநோய்கசெலாம பொய்யாதவெளடதப்புண்ணியந்தரித்தல்லவோ; பொலிநாகமீதாடு கடவுண்மாலகற்றிசிவபுங்கனைத்தெரிசித்தன ;—ராமையானீற்றின்மேலனு தினமுமன்புவைத்தளவொடேயணியிலெல்லா; வைசுவரியமுமமூழ்கியானபின்பர்மோக்ஷமன்னிநிலையாவர்மாதோ;—மாகுலவர்செய்பெருந்தவத்தினால் வள்ளியார் மணத்தினுக்குகந்தவழகா; மயிலைகண்படு கமலவயலைகண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (உ௯.)

## உருத்திராக்கத்தின் மூலமும் அதன் முகங்கள் நிறம் அவைகளின் சோரூபம் இவையாமெனல்.

திரிபுரன்செய்கொடுமையாற் சகலதேவருந்தினம் வருந்துறுதனேக்கிச்; சித்தத்திறங்கசிவன்முக்கண்ணினீர்த்துளிகள் சிந்தியதுவத்துளிகளே; —வுருவுருத்திராக்கமாய்பரிதிவிழிவருமணிகளுரியபன்னிருபேதமோ; ரொளிதுபொன்னிறமதாஞ் சந்திரக்கண்மணிகளொருபதோடாறுபேதந ;—தரும்வெண்ணிறத்ததாம்வன்னிநேத்திரத்துமணிதசபேதமாங்கறுப்புச்;சார்நிறமதாமொன்றிரண்டாகுமுகமணிகடயங்கு சிவசொரூபமாகும்;—மருவுமும்முகமணிகளக்கினிச்சொரூபமாமற்றதும்பின்னர்வருமே; மயிலைகண்படு கமலவயலைகண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (௩௰.)

## இதுவுமது.

சதுமுகத்தாமணிகடிகை முகற்சொரூபமாநதகையைந்து முகமணிகளுரு; சாற்றுகாலாக்கினிச சொரூபமாமறுமுகந் தன்னுடன்

பதின்மூன்றதுங்;—கதம்பநற்ருரிலகுகந்த வேட்சொரூபமாங்காணே
ழுமுகமணிகளுங்; கதியாதிசேடனற் சொரூபமாமெண்முகக்கணபதி
ச்சொரூபமாகும்;—சதுராகுநவமுகமும்வைரவச் சொரூபமாந்தச
முகமும்விண்டினுருவஞ்; சாருமொருபதினுன்குமுகமணியுமுண்டெ
னச்சாற்றிடுஞ் சிவாகமங்கள்;—மதியோடுணர்ந்தினைப்பூசிக்கவறியா
தமடமையேற்கருடருகுவாய்; மயிலேகண்படு கமலவயலேகண்டுறை
நாரைமயிலை சண்முகதேவனே. (உசு.)

## உருத்திராக்க மான்மியம்.

முன்னரொர்வலிமுகங் குக்கிடங்காஸ்மீரமுடி வேந்தமச்சனு
யும்; முனைறபுரிந்திகராஜ போகத்தழுழ்கியின் மூர்ந்துசிவவுலகுற்றது
ம்;—பன்னருஞ்சௌமியன் பரநாரியரைவிலகிபாரிதன்வயமானதும்;
பகர்காலஞானிதானுனுருக்கொண்டுதன்பதியைபெண்ணுக்கலதும்;
—நன்னர்மறையோர்குலச்சுப்ர தீபன்பூசைநாகத்தடைந்துமகவான்;
நயந்தளித்திடவுமொரு தருவினைக் கொணர்ந்ததும் நக்கன்விழிமணி
பரித்த;—மன்னுறாய்பலத்தினுலல்லவோவிதன் மகிமைமதிப்பரோ
தேவர்தாமும்; மயிலேகண்படு கமலவயலேகண்டுறை நாரைமயிலைசண்
முகதேவனே. (உஎ.)

## பஞ்சகௌவியம் தோன்றிய விதமும் அதை சிவபெருமானுக்கு அபிஷேகிக்கில் அதனுல் வரும் பயனும்;

தொண்டர்தம்நெஞ்சில் வாழ்சிவலிங்க வள்ளலார் தோ
யுமபிடேகபொருளுட்; டூயதாங்கௌவியம்பரசிவத்தருளினுற்று
லங்குபாற்கடலினின்றும்;—பண்டுபத்திரைசுரபி நந்தைபொற்சுசீலை
யொடுபகர்சுமனையாக்களைந்தும்; பழுதில்சிவபூஜை கல்யாகாதிகட்கு
மேபாரிடத்துற்றுபகருர்;—கண்டினியபாற்ற யிருமிழுதுகோரோச
னைக்காலேகோமயகோசலங்; கந்தவிவ்வாறுமே கௌவியமதாமினதங்
கண்ணுதற்காட்டினுலகின்;—மண்மிகுபோகங்களானபின் சிவவுல
கில்மருவிநிலைபெற்றுவாழ்வார்; மயிலேகண்படுக்மலவயலேகண்டுறை
நாரைமயிலைசண்முகதேவனே. (உஅ.)

## பஞ்சகௌவியம் ஆன்ம சுத்திக்காக உட்கோள்ளின் அவைகளால் வரும் பயனும் அவைகளிற்சேர்ன்றிடு பொருள்களும்.

பத்தியோடிப்பஞ்சகௌவியம் பருகிடிற்பகரான்ம சுத்தியினை
யும்; பாவினுற்பகைநாசமாகுநற்றயிரினுற் பண்புடையசுதர்களுண்டா

ம்; —நத்துநெய்யாலனைவரும்மதித்திடுவராம்நறியகோரோசனைக்கும்; நவிலுமாயுண்மிதுங்கோமயம்பிணியுழுக்கோசலமுநயக்குந்திரு;—சித்தியாமிவைநிற்கவேகோமயத்ததனினற்செய்யகூவிளந்தாமரைச்;செப்புநீலோற்பலமுதித்ததக் கோசலத்தெழின் மணக்குக்கில்பாலில்;—வந்தாதுசெஞ்சாலி தயிரினிற்சந்தனமுமாஞ் சித்திகோரோசனை; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரை மயிலைசண்முகதேவனே. (௨௧.)

## சிவபெருமானுக்கு இப்பொருள்களால் அபிஷேகிப்போர் இபயலன்களை அடைவாரெனல்.

விதியினூற்றபன நீராட்டிடிற்புதியநற்போகத்தழுந்திவிடையோன்; விளங்குசிவவுலகத்தில் வாழ்வர்நல்லாற்று திருமஞ்சனமதாட்டவிமலன்;—பதியினிற்செல்வர்சொல்லாவினைந்தாட்டவிண்படிந்து மானுலகின்வருவார்ப் ; பாலினால்வேதவிதிவழுவாத சிவமறையர்பாற்பசுப்பதினாயிரம் ;—விதியோடளித்தபலனடைவர் வெண்டயிரினால்விண்டுவின்பதமேவுவார்; விளம்பிடுஞ்சர்ப்பமோராயிரங்கோடி காலவினைத்தொடுவினைகளகலும்;—மதியினோடாவிநெய்யாட்டிடிற் சிவலிங்கவள்ளலுக் கெனுமாகமம்; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே; (௩௰)

தேனுகந்தாட்டிடினானுகந்திட்டவினை தீர்ந்திடுங்கருப்பினிரதந்; திகழ்வீரபத்திரன திருவடியிலுய்த்திடுந்திலதநெய்வாயுவுலகிற்;—றுனுயர்நதிருப்பரிளநீரினாற் பிதிருலகுசார்வர்நற்றிருநீற்றினாற்; றவமுனிவர்போற்றசிவவுலகத்தில் வாழ்வர்பொற்றகைய கூவிளக்குழம்பால்;—ஊனமிற்சிவமறையர் பாலயுதமாவினை யுதவவருபலனடைகுவா;ரோங்குமெலுமிச்சையும்முக்குற்ற நீக்கியுமைபாகனடிநிழலினுய்க்குப்;—மானவாயிவைசிவாகமங்கள்புகலாகுமாலடியர்குறைமாற்றுதலைவா; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே. (௩௧.)

## இன்னிறப்பசுக்களில் இன்னின்னபொருள் கோடலாமெனலும் அப்பொருள்களை யெடுத்துக்கொள்ளவேண்டிய அளவுகளும்

நீலநிறமுள்ள வொருபசுவினிற்கோசலமு நிறைபலமதொன்றுகொள்க; திகழ்செம்மைநிறமுளப்பசுவதனிலைந்து பலநிறையதாய்ப்பால்கொள்கவும் ;—சீலமுறுவெண்ணிறப்பசுவினிற்றயிரதைச்செப்புபலமூன்றுகொள்கச்; செய்யநற்கபிலையதினெய்யுமிருபலநிறைச்சீருடன்பெற்றுகொளவே;—யேலாமையாய்விடிற்கபில நிறமொன்றிலேயெ

டுத்திடுகவிவ்வைந்தையு; மியம்புமிதுவரிதெனிற்பல நிறப்பசுவினுமெ டுத்திடுகபாலாதியே;—வாலிபக்கன்று பசுதணிந்தபின் கறந்திடெனவ மூங்கிடுஞ்சுருதிநூல்கள்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை நாரை மயிலைசண்முகதேவனே. (௬௨.)

கௌவியங் கொள்ளுதற்குத்தகாப் பசுக்களிவையெனல்.

கன்றீன்று பத்துநாட்சூதக மதுற்றபசுகன்றிறந்திட்டபசுவுங்; கவலைபுரிநோய்மூப்புகிடாரிகன்றும்பசுக்கருக்கொண்டிருக்கும்பசு;— நன்றொன்றுமில்லாதமலட்டுக்கோநாற்றமுறு நாளுமலந்துய்க்கும்பசு; நவினுமிவ்வெண்வகைப்பசுவலான் மற்றுமுளநற்பசுவினிற்கொண்டு மே;—துன்றைந்து கௌவியமுமீசனுக்காட்டலென சொற்றிடுஞ்சி வாகமங்கட்; டுயபுகைநிறமுளப்பசுவினதுகோமயந்துடர்ந்து தரைவி ழுமுன்னரே;—மன்றருமரையிலையிலேந்திநடுவதின்விரலதன்கனத்த ரைவாங்குக; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலைசண்மு கதேவனே. (௬௩.)

சுத்தோதகந்தாபிக்குமுறைமையும் அதைவொன்றேடொன்று கூட்டிடுமுறைமையு மிதுவாமெனல்.

ஈசான்யமதிலவ்வியத்தகோட்டத்தையுமியம்புமுறைபூசித்தநி; லெழின்மையுறுபாத்திரமும் வைத்ததைச்சத்திதத்துவத்தினுலிடுக பூசை;—மாசில்பாத்திரமதிற்சுத்தோதகமுமொருபலநிறைவழங்கிய தனின்; மன்னுகுசையுடனறுகுசந்தனமுமிட்டுபின்வலிய சிவகாயத் திரி;—நேசமுறுவிதியுடனுச்சரித்திட்டபின்னெடுமூலமந்திரத்தா; னி கழுகோமயத்தை கோசலத்திலுங்கோசலம் நெய்யிலும் நெய்த்தயிரி லும்;—மாசிறயிர்பாலினிற்கூட்டிடுகவன்றியிதைமன்னுபாலினுங்கூ ட்டலாம்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை நாரைமயிலை சண்முக தேவனே. (௬௪.)

இவ்வகை மலர்கள் இழிபாமெனல்.

முகையாயெடுத்தபின்னலர்ந்ததும் பழயமலர்முதிர்ந்து கீழுதிர் ந்தபூக்கள்; மொய்க்கிருமியின் கடிகளெச்சஞ் சிலந்திமயிர்மூடிகைக் கொண்டமலர்கள்;—சகசமிலெருக்கிலையதாமணக்கிலைசீலைதாங்குறப் பொதிந்தபூக்கட்;டாழ்ந்தரையிலுற்றபூகங்குலினெடுத்தமலர்தண்ணீ ரமிழ்த்தலின்னுங்;—துகளுறும்பாத்திரத் தெடுத்தலிழிகாடெய்தறா செச்சில்குளியாமலே; தொட்டெடுத்ததிமலர்களிவையெலாமிழிபென

ச்சொற்றிடுஞ்சிவாகமங்கள்;—வகைகண்டுபூசிக்கவறியாதவேழைக்கு வந்தருள் செய்நாளுமுளதோ; மயிலைகண்படிகமலவயலைகண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே.— (௩௫.)

நிர்மாலியமும் சிலதாதுமெனவும் இன்னாள் வரையிலும் இம்மலர்களாமெனவும் உத்தம மத்திம அதம்மலரும்.

தேந்தளபவில்வநற்றளிருபொன்பத்த புஞ்சீர்மலர்த்திருநீலமு ஞ்; செம்பொனூற்செய்மலர்கள் போலுநின்மாலியஞ் செப்புமிவைக முவிகொளலாம்;—பூந்துகண்மனையேழுநாளலரி மூன்றுகாட்போதள யு மணியலாகும்; பூக்களில்லாவிடிளிதன பழுப்பரும்பிலைகள் பொ ரு ளிருமணியலாமே, தாந்தனக்கெனவைத்த நந்தனத்தலருமே , , முத்தமம்வனத்தின்; றகைமல ருமத்திமபிறன மைத்திடுவன த்து மலருமதமமாகும்;—மாந்தர்தவமேற்குநின்றிருவருட்கருணையுடையாய்க்குநாளெந்நாளதோ; மயிலைகண்படிகமலவயலை கண்டுறைநாரைமயிலைசண்முகதேவனெ (௩௬.)

சிவபெருமானை இன்னமலரால் அர்ச்சிக்க இன்னபாவங்கள் நீங்குமெனவும் பஞ்சவில்வமும்.

எள்ளதுஞ்சொல்பிரமகத்திபோந்தாய்பழியை யெழினறுங்கொன்றைநீக்கு; மியம்புபரதாரவினைவெள்ளெருக்ககற்றிடுமேணமிற்பொய்மைவினையைத்;—தள்ளிடும்வில்வமாங்குட்டநோயகத்திரித்துளிரொழிகதிடும் வறுமையைச்; சாற்றருந்துளபமே நீக்குமாந்தும்பையோதாழ்ந்தசோகத்திநீக்கும்;—கள்ளுணவுசோங்குமப்பூவொழித்திடுங்களவுகைவினைப்பலாசுநீக்குங், கடுமையாய்ச்சோதரரைவதைத்தபழிபோக்குமேகவினறுகுநற்சந்தனம்;—மள்ளன்மாத்துயரெலாம்நீக்குமாற்றுருகணைமாய்த்தவடிவேலரசனே; மயிலைகண்படுகமலவயலை சண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (௩௭.)

இதுவுமது.

பன்னுவிநெய்யுடன் நெல்லிநோய்போக்கிடும் பகர்வாக்குதோடநீலம்;பறித்திடுஞ் சிவலிங்கபின்ன தோடத்தையும் பசியநல்லசோருமீக்கும்;—முன்னுவுபாலடைந்தோர்வறுமை நீக்குமெனமொழிந்திடுஞ்சிவாகமங்கள்; முச்சத்திவில்வமும் விளாநொச்சிகிளுவையொடுமொயம்மையுறுமாவிலிங்கம் ;—நன்னாகுமிவைபஞ்சவில்லமாம் நக்கனால்வனைமேருநலமிழந்து; நடுக்கமு ... [illegible] ... குலுங்கிடச்செண்டிறு

... U. V. SWAMINATHA IYER LIBRARY

லையப்புடைத்தவீர—மன்னுநின்னடிமலரையென்னுளுமறவாமலர்ச்சி க்கவருள்செய்குவாய்; மயிலைகண்படு கமலவயலைகண்டுறை நாரைமயி லைசண்முகதேவனே. (௩௮)

## போக்கியமலர்கள்.

பாதிரிப்பூவினிற்றருமபத்தினிவரும் பலாசமலரடிமையுண் டாம்; பகர்தாழையாற்சிவிகை முல்லைகுடையாந்தாதுபரியமாதுளைச் செல்வமாம்;—பூதாமரைப்பகைகள்போக்குமெலுமிச்சையாற்பூங்கா வனங்கள்பெருகுப; புதியசெங்கழுநீர்ப்பூவினாற் பரிவரும்புரிவிரைத் தகரைபசுவாம;—காதலாய்க்காக்கமழுமலரிடத்திரு வருங்கல்லார மலர்சுதர்களாங்; கடிசெய்தலுந்தனமுமாகுமிவ்வகை யெலாங்கௌரி யர்க்கணியவருமே;—வாதொன்றுமனத்தினினீ கின்றிடாதவாவன்ப ரிடர்களைவேலவா; மயிலைகண்படு கமலவயலைகண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே. (௩௯.)

## சிவபூசையைக்குறித்து பத்திரமலரெடுக்கையிலும் சிவசரிதங் கேட்கையிலும் சிவபூஜையிலும் சிந்தைவேறாகாதெனல்.

நறுமலரெடுக்கையிற்சிந்தை வேறாகையானம்பி நானிலத்துற்ற னன்; நாரிதற்சிவனருட்பொருளையுள்வையாமையான் மலைமடந் தையாளு;—ளாறுமுகற்கூட்டுபாலனுமோருமுமை யருட்சித்திகண் மறந்தனனு; லாலடிப்பாறையாயினர்கள் சிவபூஜையிலகத்துநிலைவே றானதால்;—செறுத்தசுரனென்மலைப் பொதுப்பிலுட் பொருந்தினன் றிகழூநற்கீரனிடையிற்; றிணிசத்தியாதனன்பூசைவிட்டெழுகையாற் றெறுநராலிடையின்மாய்ந்தான்;—மறுமைப்பயன்றருங் காலங்களெ ளைவகளிலுமன நிலைத்திருத்தல்விதியே; மயிலைகண்படு கமலவயலை கண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே (௪௰.)

## சிவாலயத்திலும் மற்றுமுள்ள புண்ணியத்தானங்களிலும் மலசலம் விடுப்போர் அடையுந்தண்டனை.

முக்கணிறைவிற்றிருந் திருக்கோயிறன்னிலு மூருருகுந்தனவன ங்கண்; முதலாயபுண்ணியத்தானத்தின் மலசலமொழித்துளோர்க் கோசமுற்றுங்;—ஆக்கமுற்றலறவல்லிருப்பினாற் செய்துறுந்தடிகொ ண்டடித்துன்னிச்; சுடர்சான்றழற்றூசிபல கொண்டழுத்துவார் த்துன்னுனீர்த்தாரையதனிற்;—கக்குசுடர்முனையினிற் கூரதாயுள்ள வொரு கருவிமலவாய்நுழைத்துக்; கபாலமீதேறிடச்செலுத்திதுன்பு

றுத்துவார்க்கவழ்த்துவர்கள் கொடியதீயில்;—மக்கடித்திடுவோர்சொல் விதிதப்புவோர்களை வழங்குறுந்துயர்செய்குவார்;—மயிலைகண்படுகமலவயலே கண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (சக)

## வேதசொருபமான நதிகளும் அவற்றின் மான்மியமும்.

முத்தங்கொழித்திலகுகங்கைநல்லிருக்கு மறையுலமாமிரண்டாமறை; முன்னுதிருயமுனையுஞ்சரஸ்வதித் திருவுருவமூன்றதாமறையதாகு;—முத்தமத்தவத்திலகுநருமதைத் திருவுருவமுய்ந்தரும்நான்காமறை; யொப்பரியகங்கையோர்நாள்மூழ்க பாவங்களொழிந்திடும் வெருவியமுனைச்;—சத்தநாண்மூழ்கவுஞ்சரஸ்வதிகொருமூன்றுநாளினினிற்றணக்கும்வினைகள்; சாற்றரும்நருமதைக் கண்டிடிற்பாவங்கள்சகலமுமவிட்டேகுமால்;—மத்திரக்கடலாடிவரசுரிமை கொளமகன்மணிவேலெடுத்தகுமரா; மயிலைகண்படுகமலவயலேகண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே. (சஉ)

## பசுவின்றிருமேனி தெய்வசொருபமா மெனல்.

வேதன்மாற்பசுவினது கொம்பினடிவாழ்குரவர் விளங்குதன்முனையிடத்துர்; விமலமுறுதீர்த்தகோதாவிரியோட சரவுயிர்சரவுயிர் கண்மேவிவாழுஞ்;—சாதமுறுசிரத்தினிற்சிவபானுநெற்றிநடுசத்தியும்மூக்குநுதியிற்; சண்முகனுமூக்கினுள்ளிரண்முதலானதேவர்தாந் தங்கிவாழ்வார்க்;—கோதிலிருகன்னத்திலஸ்வினித்தேவர் கட்குலவிவாழ்ந்திடுவர்கண்ணிற், குளிர்மதிப்பரிதியுந்தந்தத்தில்வாயுவுங்குழைநாவில்வருணதேவும்; —மாதமுறுநெஞ்சினிற் கலைகளும்மணிகளின்மறலியோடியக்கர்வாழ்வார்; மயிலைகண்படு கமலவயலே கண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே. (சங.)

## இதுவுமது.

உதட்டினிற்சந்திதேவதைகள் வாழ்ந்திடுவர் நல்லும்பர்கோன் கழுத்தில்வாழ்வா; னுயர்தகையமுரிப்பிடத்தருக்க தேவரும்வாழ்வருரதினிற் சாத்தியர்களாம்;—பதங்களுன்கதனிலும்வாயு நிலைபெற்றிடும் பகருநன்முழந்தாடனிற்; பண்புகொண்பருத்துவர்கள்வாழ்வார் பூங்குளம்புநுதிபன்னகர்ச் செரிந்துவாழ்வார்;—நிதமுமக்குளம்புநடுகந்திருவர் தங்குவார்திகழ்குளம் பதின்மேலிடம்; நேர்மையாடரம்பையர்கள் வாழ்குவார்முதுகதனினிலைருத்ரதேவர்வாழ்வார்;—மதகமுறுசந்துக்கடோறு மெண்வசுக்களுமன்னி வாழ்ந்திடுவர்மாதோ, மயிலைகண்படு கமலவயலேகண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே.

உயரரைபரப்பதிற் பிதிர்தெய்வமன்னுவாருயர் சத்தமாதாவு மே; யோனிதனின் வாழ்குவாரொண்குதத்திடையினிற்றன்னு திரு வோங்கிவாழும்;-நயமாகுவாலடியிஞகாதிபருமேவிநண்ணுவார்வான மபிரகின்; நண்ணுபாதித்தனுயர்கோசலத்தராய நற்கங்கைகோமய திற்,—சயமுறும்யமுனையாமுடம் பிடத்துரோமங்கள் சார்ந்துமாத ரர்கள்வாழ்வார்த்; தகைமைநேர்வயபதிற் பூதேவிவாழ்குவாடனத்தி ளிற்ற ல்கள்வாழும்;—வயறிதயமுகத்தினில் முத்திகள்வாழுமால்ம யிலினாநகாடுவேளே; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை நாரைமயி லைசண்முகதேவனே. (சரு.)

இதுவுமது.

அத்திதனிலுடற்குளுறு சக்கிலத்ததனிலுமனைத்தாய யாகசிரி யை; யடங்குமற்றங்கங்கள்யாவிலுங் கற்புடையவரிவையோர்மன்னி வாழ்வா;—ரித்திறந்தெய்வங்கள் யாவுமேயதனுடலினிடநிறைந்திரு ப்பததனு; லெண்ணறியவதனுருவுதெய்வச்சொரூபமதையேத்தவோ ர்ச்சிவவுலகினிற்; சித்தங்களித்துபன்மலர்கணிறை விமானத்தாசிவ ன்பரன்போல்வாழ்குவார்த்;தெய்வாமபசுமனமகோகுறச்செய்தவர் கடிநரகில்வாழ்வர்மாதோ;—மத்தமுடையோர்க்கு கின்னருணிலைகள் வாய்க்குமோவன் கண்ணனுககருள்வையோ; மயிலைகண்படுகமலவய லைகண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (சசு.)

சிவபாததீர்த்தத்தின் மகிமை.

கந்தவெற்பகன்றறச்சேதுவுக்கேகு நற்றநீசிமுனிகானலொன் றிற், சரமுடுவெல்நவ்வியஞ்சலபந்தங் குரைகள்கலந்துமுறையாடல்க ண்டே;—புந்தியில்வியந்தவையைவினவதம்பூர்வகதை புகன்றுமுனி தான்பணிந்தெய்; புன்மிருகதேகத்தைமாற்றியருள்செய்யெனப்போ ற்றலும்முனிபுங்கவ; னேந்தாறெழுந்தருட்பா சிவத்தாளுதகமங்கை கொண்டாட்டவவைக; ளற்புதத்திருமேனிபெற்றுபொன்னுலகரசன டிபவகற்பகாலம்;—மந்தரத்தமர்ந்திடிற் சிவபாததீர்த்தத்தின் மகி மையாருரைக்கவல்லார்; மயிலைகண்படுகமலவயலை கண்டுறை நாரை மயிலை சண்முகதேவனே. (சஎ)

சிலாதரரிஷி புத்திரனுக்காகத்தவஞ்செய்கையில் சிவபெருமான் எழுந்தருளி வந்துஅனுக்கிரகஞ் செய்தமை.

ஓதுதிருநாவுக்கரசர் கண்களிகொள்ளவுயர்திருக்கைலாயமா; யுற் றிலகு நற்றிருவையாறதிற் சூரியப்புஷ்கரணி யொருபாலதி; லோத

14661 (8766)



ணமதாகவேவுபலமுண் சிலாதரனுமோங்குமேரி யைந்துடவமே; யுருற்றின்றொருமகவினைசையாற் சங்கரனுமுணர்ந்து மவனுறைந்துபுகலுந்;—நீதில்வேதாகமக்கலைகள் கற்றவனுய்த்தீவினையில் யோனிமானுய்ச்; சிந்தித்தபடிவருவனுயினும் பதினாறுவயதுதான்றீர்க்கமென்றே;—மாதைதிருமேனிவைத்தவனிசைத் தேசிகனடியார்துயர் மாற்றிபருளும்; மயிலைகண்படுகேயலவயலைகண்டுறை நாரைமயிலைசண்முக தேவனே. (சஅ)

சிலாதர ரிஷிக்கு நந்திதேவர் புத்திரனாக பேழையுட்கிடைத்து சிறிது நாட் சென்றபின் தந்தை அற்பாயுளனென்று வருந்துகையில் அவ் வருத்தம் நீங்கநந்திதேவர் தவம்புரிந்தமை.

கறைமிடற்றவனருட்கருணையால் மகவேட்டயாமுயல் கின்றகாலைக்; கண்டனன்றமணியப் பேழையொன்றதனுளே கைலைவாழ்பரசிவம்போற்;—குறையுடன்றகற்றுமோர் பசுங்குழவிதனைக்கண்டெடுத்துகளிகொண்டுவாழ்நாட்; குமரர்க்குபதினான்கு வயதாகசிலாதரன் குளித்தனன் றுயராழியுட் ;—பொறையுடைச்சைலாதி தந்தையுட்கிடையறிந்தையநீகவலைபுரியேல்; புராரிதன்னருளதானடுவேனைப்போக்குவேனெனத்தவம்புரிந்தனனரோ ; மறைமுடிப்புன் முறுவல்கொள வள்ளிதெய்வகுஞ்சரியுடன்வாழுறைமெய்; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே, (சகூ)

சைலாதிதவஞ் செய்கையில் சிவபெருமான் வந்து சிவதீக்கைசெய்து நந்தியென்றுதிருநாமமிட்டு சாருபமளித்து கைலையிற்சென்று பின் வானரமுகமுந்தந்தமை.

கற்பிதமகன்றமெய்த்தவனிடங் கண்ணுதற்கடிதூற்றசிவதீக்கையுங்; கனிந்துசெய்திந்துத ற்சாரூபமளித்துபேர்க்கழறினன்நந்தியென்றே;—பொற்புதருகைலைக்குமுடன்கொண்டுபுகவுமைப்பொள்ளென வெழுந்திருவருட்; பொலிசடைபபுங்கவனையினையனென்றறியளாய்ப் புந்திகவழ்கின்றபோதில,—முற்படுநந்தியுமையுள்ள றிந்தரன்றுண் முடிகொண்டெனக்குகவியின், முகமருள்கவென்றிடத்தவம் புரியவித்துபின்முசுமுகமும்வழங்கினனரோ:- மற்படுங் கடனீர்வறந்திடக்கண்டவேல்வள்ளலென் †வறுமைதீர்ப்பாய்;மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (ருய)

---

† வறுமைதீரப்பாய் என்று இதுமுதல் நானகு திருவிருத்தத்தினீற்றிலுங் குறித்ததெற்றுக்கெனில் குமாரக்கடவுட்கோயில் கட்டுதற்குக்கைப்பொருளிலாக் குறைபற்றிக்கூறியவாறெனக் கொள்க.

பாதகிரிச்சஞதிமுதல் கிரிச்சனவிரதங்களின்வகை.

ஒருபகற்போதுணற்கங்குலுணல்யாசிதம் மொழிந்தகல்லுண்டி வரைத; லோதுநான்கிதுபாதகிரிச்சனமதாசுவடமோங்குகுசையத்தி வில்வ;--முரைத்தவிவைவொவ்வொன்றிலொவ்வொருதினங்தோய்த்து றும்புனற்பருசலிதுதா; னுயர்பன்னகிரிச்சனமதாகுமொன்றொருநா ட்குகந்தபிண்ணுக்கு திம்பால்;—புரிதலின்மோர்புனற் பொரிமாவி னைக்கோடன் முறைபினோர்வைகலுண்டி; புணிதலின்னெறி செயற் சௌமியக்கிரிச்சனம் முறைமைதாணிதுவாகுமால்;—மருவுநான்மு கன்றலைக்குமாப்புடைத்தகர வள்ளலென்வறுமைதீர்ப்பாய்; மயிலை கண்படுகமலமயலை கண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (ருக)

இதுவுமது.

மூன்றுநாளோரொன்றுபிடியமுது முறைபடவுமுண்ணுதற்றீர் தன்முன்னுண்; மொழிந்தவீதகிரிச்சனமதாம்பாலுமேமுவ்வேழ்தி னத்தருந்த;—லான்றவர்களீதாதிகிரிச்சன மிதென்றறைவராகுமு ன்னுட்காலையி; லருந்தன்முன்னுளிரவிலருந்தன் முன்னுட்கிடைய ருந்துதலன்றிமுன்னு;—வேன்றதோருணவுவிட்டிருத்தலேநற்பிர்சா பத்தியக்கிரிச்சனமிதே; வீராறுநாளுணவு விட்டிருத்தலுமதேவெழி ன்மைபார்க்கிரிச்சனமதா;--மான்றலில்லருணகிரிநாதர்துதிமகிழ்ந்து கொள்வள்ளலென்வறுமைதீர்ப்பாய் மயிலைகண்படு கமலவயலைகண் டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (ருஉ)

இதுவுமது.

கோசலங்கோமயம்பாலும்வெண்டயிருநெய்க்குசையினீரதுமுணவு; கொள்ளாதிருத்தலிவையேழுமேவொவ்வொன்றுமொவ்வொரு தினத்திஞேற்கி,—ஞசிலாமெய்த்தவச்சாந்தபனகிரிச் சனமதாகுமா மிவைகளேழி; லாதிகோசலமாதிவொவ்வொன்றுநாளேழருந்திநோற் றிடினஃதுதான்;--பேசரியவுயர்சாந்தபனகிரிச்சனமதாம்பிறங்குமிவ் விரதமெவையுர்; பிழையாமலாற்றினோர்மனசித்தியாவையும்பெறுவ ரௌதாற்பேசுமால்;—மாசற்றவாரணப்பதாகைசமுகத்தனே வள்ள லென்வறுமைதீர்ப்பாய்; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைம யிலைசண்முகதேவனே. (ருங)

சாந்தராயண விரதங்களின் வகை.

ஒளிர்தருஞ்சுக்கிலப்பக்கத்திஞதிதொட்டோரொன்றுபிடிகுறை த்து; முற்றபின்பக்கத்திஞதி தொட்டோரொன்றடைவதாயுயர்த்தி

யுண்டுப்; குளிர்தருநீரினின் முப்போதுமூழ்கியிது கொள்ளலேசாந்
தாரயணங்; கொற்றமுறுசுக்கிலப்பக்கத்திறுதிதொட்டோவ்வொன்று
யர்த்திகொண்டுங் கிளர்த்துமறுபக்கமுதலோரொன்று குறைந்திடிற்
கிளர்ப்பரப்பேர்காலையுங்; கிட்டிரவுநன்னான்குபிடியருந்துதல்வாலசா
ந்தராயணக்கிரமமாம்; வளர்தினமுமுக்கவளமலதோமசேடமு மாந்
தலுஞ்சாந்தராயணம்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயி
லைசண்முகதேவனே. (ருச)

## நித்திரைவிட்டெழுந்தவுடன் வழிபடவேண்டிய தெய்வங்களும் தெய்வப்பொருள்களும்.

பின்னிரவின்மூன்றாஞ்சாமத்தெழுந்து மேபிரிந்துகிட்டிசை
யாயினும்; பெற்றிதருமுத்தரத்திசைமுகத்தாயினும்பெறு நீறணிந்
திருந்துப்;—பன்னரியநஞ்சிவக்களிற்றினைப்பரையொடும் பரசிவத்தி
னைமாலினைப்;பாக்கியத்திருவினொடுமுண்டகத்தவனைநற்பனுவன்மா
னொடுமகவான்;—றன்னையிவரோரையுங்கங்கைமுதலாம்நதிகளைத்
தையுந்தண்கடன்முதற்; றழைதிசைக்கடலினைத்திருச்சைலமுதலா
யசைலமும்வசிட்டாதி; மன்னுமாதவராலாலின்னமுண்டடிபரவுமாத
வர்க்கருள்செய்திடும்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரை மயி
லைசண்முகதேவனே. (ருரு)

## இதுவுமது.

உலகெலாம்புகழருந்ததிமுதற்கற்புடைய வுத்தமத்தவமாதரை;
வுயருருப்பசிமுதற்றெய்வமடவாரையுமொளிர்காசியாதிநகரை,--நில
வுமாலணிகவத்துவமணிகளாதியை நெடுங்கொடைத்தருவைந்தினை;
நிகழ்த்தரியவைராவத முதற்றேலினைநிலைபெறுஞ்சனகனாதித்;—த
லைமைநற்றவயோகருஞ்சேடன் முதலாயவரவினைச்சதுர்மறைகளைச்;
சாற்றுபிரணவமாதியெழுத்தைநாரதாதிதக்க முனிவோர்தம்மையு
ம்;--மலினமற்றிடுதேனுமுதலாவுமின்னமுண்டடியர்துயர்மாற்றியரு
ளும்; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலை சண்முகதே
வனே. (ருசு)

## இதுவுமது.

மெய்யரிச்சந்திரன் முதலுண்மைவேந்தரையும் வெற்றி
பெறுததீசியாதி; மேலானகொடையாளர்தம்மையுங்காயத்திரிமுதலா

யமந்திரத்தை;--மொய்யளிகள்பண்செயும்நந்தனத்தொடுசோலையதுவு
மிந்திரனுகைக்கும்; மூழக்குவாம்பரிமுதற் பரியதைத்தீர்த்தங்களெல
ற்றிற்குமுதலாயதோர்; வையத்துண்மூன்றுறுந் தெய்வமாந்தந்தை
தாய்மலரடித்தாளதனையும்; வைகறைச்சிந்தித்தெழுந்திடுதல்வேண்டு
மெனவழங்கிடும்விதிநூலரோ;—மையன்மேனமிகுஞ்சிறியபாமரனெ
னக்குநின்மலரடிக்காட்சியுளதோ; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை
நாதை மயிலைசண்முகதேவனே. (ருஎ)

உட்கருவிகள் பிறக்கருவிகளின் வகை.

சத்தர்தியைந்துபொறிபத்துடன் கரணநான்கைம்பூதமான்மக
ருவிச்;சார்சாலமாதியாயோரேழுவித்தியாதத்துவஞ்சிவமைந்ததாம்;--
பத்துமூன்றோராறுமுட்கருவியாம பூதபனைத்தொழில்களையைந்துட
ன்;பகர்நாடியொருபதுடன்வாயுபதுவேடனைப்பகர்மூன்றுவாக்காதியி
ன்;—சுத்தவழியைந்துடன்பிரகிருதியின் வழிதானதுடர்குணம்மூ
ன்றதாஞ்; சொல்வாகதுநான்கதோட்டுறுபதும் பிறக்கருவிதோற்றத்தி
ன்வகையதாகும்;—மத்திரத்தொடுசெங்கவாணர்தங்கல கமதுமாற்றிய
ருள்செய்தபுலவா; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாதை மயிலைச
ண்முகதேவனே. (ருஅ)

இச்செய்கைகளாற்றீவினையுண்டாமெனல்.

குலத்திலுருவத்திலுங்கல்விநல்லழகிலுங் குறைவுளோர்தமை
யிகழ்தலுங்; கூறுசைவாசாரமற்றுரிடத்துணற்கோபமுஞ்சோட்சொ
ல்லலும்;—பலத்ததாய்த்தன்னைப புகழ்ந்திடுதன்மனிதரைப்பாடுதற்
றேவர்மறைகட்; பகருநற்பிராமணர்களரசர் நற்றவயோகர்பாவாணர்
கற்புமகளிர்ச்;---சலித்திவரையிகழ்தலுஞ் சூதுகலகதிலுஞ் சார்பி
லாத்தூதிலுந்; தனந்தேடலும்பிறன்குறையெடுகதோது தற்சாற்
றுமிச் செய்கைகளெலாம்;---வலித்துறுந்தீவினைகள்வருதற்குமூலமா
மறிந்துவிலகற்குவருளாய்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாதை
மயிலைசண்முகதேவனே. (ருகூ)

சிவபத்தருக்கு விபூதிப்பை உருத்திராக்கம் பாதுகை கோடை கோடப்போரடையும் பலன்.

பரசிவத்தன்பர்பாற்பூதிநிறையாலயம் பரிவோடளிக்கிலுலகிற்;
பரவுநற்புண்ணியத்தீர்த்தமாடிடுபலன்பரித்துசிவனுலகின்வருவர்;—
ரான்றிருக்கண் மணித்தாழ்வடமளிக்கில்வ் வானடிகணிழல் செய்ய;

வடைகுவாரவ்வுலகை வெண்கவிகையீந்துளோரணி மணப்பாவையுடனே;-திரையிடத்தாசனாய்ச் சதயோசனைத்தளவு நிண்கோனடத்தி வாழ்வார்த்; திருவடிப்பாதுகையுமீந்திடிற் றேராதிவாகனத்தூர்ந்து தேவர்;--மருவிநிறைசிவபுரியின்மன்னி வாழ்ந்திடுவரிவ்வேழையெவ்வகையாவனோ; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முக தேவனே. (௯௰)

இத்தானங்களைச்செய்யின் இன்னபலன் அடைவாரெனல்.

அன்னதானத்ததாலளவிலாச்செல்வத்திலாழ்ந்துமேற்சுகமுமுறுவா; ரன்புடன்குளிர்ந்தநீரளிப்பவர்கணீர்விடாயடையார்கள்வெள்ளிதானம்;--பன்னருப்வடிவழகுபெருகுவார்த்த களிநெய்ப்பரவுறுந்தீபதானம்; பரிதிம்போற்கண்களொளிருமையா ஒதற்றான்றிலும் பகருநற்கோதானமும்;--துன்னாரூர்மறலியூர்ப்பொருட்கடானத்தினாற்சுழன்றுபிறரிடத்திலிறவார்த் துகளிலாநற்றயிலமீகையாற்குழவியின் சுகமுறுவரில்லமீவோர்;-மன்னுமதிநவமேழுமாடநிலைமேல்வாழ்வர் மகவன்முடிதோய்ந்ததாளா; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௯௧)

இதுவுமது.

பரிகடருவோர்தெய்வவிமானத்தி னூருவார்ப்பருத்தவிடைதானமதனாற்,பகருபொற்றிரு வினாடுகாளுமேவாழ்வர்நற்பஞ்சணைச்சிவிகைபகர்வோ;--ரரிகண்விழிமாதரொடுகூடிவாழ்ந்திடுவர்நெல்லருங்குவையளிக்கினுலகி; லனைத்தாயசெல்வத்திலுயாகுவாரான்றவர்க்காபத்திலஞ்சலென்றே;--பரிவுற்றளித்தவர்கள்பாரளித்திடுவர்மறைபயிற்றுவோர்பொருள்கொடுத்துப்; பயிற்றுவிப்போர்களும் பிரமனூரடைகுவார்ப்பண்பிசைந்தரியநிதியை;--மரிசபொடளித்தவர்கள் பெற்றதையுகந்துவரும் வறுமையென்னாளுமருவார்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௯௨)

இவர்களுக்குச் செய்யுந்தருமம் ஒன்றுகோடியாமெனல்.

போதகக்குருமரபின்வழியொழுகுவைதிகர்ப்புவியதனைவிட்டதுறவோர்ப்; பொருந்துநற்குடிவந்தவுயிவோர்கடக்கைதாய்ப்புரப்பர்சிவபத்தர்மேலோர்;--வேதமுறைவழுவாதமறையோர்கள்சிவசரிதைவிளம்புவோர்சிவபுரியினில் வீறுதமிழ்வேதங்களோது வோராடுவோர்விமலநற்பணிகள்புரிவோ; ரோதரியபஞ்சாக்ஷரஞ்செபித்திடுவோர்களுத்தமத்தவயோகிக; ளுதவியொருகாலத்தில் செய்துளோரிவர்க்கெ

லாமொன்றளித்திடல்கோடியாம்; மாதவன்போதனிந்திரதேவர்தவத்திலைவரதனவேவிழிவந்தவா; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (சு௩)

தனதானியம் மிகுந்திருந்தும் நல்லோர்பால் அறம்செய்யாதார் அடையுந்தண்டனை யிதுவாமெனல்.

தன்மனையுள்தானியந் தனமிகுத்திருக்கவுந்தனை நாடிவந்தநல்லோர்; தமக்கன்புகூர்ந்து பொருளீயாவையவருணத்தண்ணமுதருந்திடாரை.---முன்முனைக்கூராயவிருப்புமுனை கந்தரத்துள்ளவைந்தடிமுகப்பின்; முற்றுசங்கிலியினுலார்த்திட்டிழுத்து பலமுள்ளதூணிருகைநாட்டி;--வன்மையாயுத்திரம்பொருத்திய தனவேவினில்வலிய கைகால்களுதற; வன்கட்டதாய்க்கட்டிதூக்கிடுவரொருநூறுவருடமாய்த்தேவராளவில்; மன்மைவாதனையலாலின்னமுஞ் செய்கொடுமைவாக்கால் வழங்கவுறுமோ; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (சு௪)

பிதுர்தினத்தில் சிவனடியாருக்கு அமுதுசெய்விக்கும்பலன்.

தம்பிதுரினுள்வந்தபோதுசிவனடியரைச்சற்பத்தி யொடுகனிந்து; சார்பாயிருந்தமுதருந்திடிற் பூமியிற்றுணிருந்தங்குநரகில்; வெம்புமிருபத்தொன்றுவழியரைச்சிவனுலகில்விடுத்தவருமாவரன்றி; வெற்றியுளசற்புத்ரபேறுடனுமிகபோகவெள்ளங்குளித்துவாழ்வார்;--சம்புவடியார்க்கிடின் முத்தேவர்தேவருள்சாற்றுபிதுர்தேவர்தாமுந், தத்தமக்கென்றுகளிகூர்வரேலிக்கிரியை சாற்றிடற்கெளியதாமோ; வம்புபுரிசூர்தடிந்திட்டவடி வேலவென்வறுமை நோய்மாற்றியருள்வாய்; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (சு௫)

ஆன்மவிசாரஞ்செய்தபெரியோர்மருச்கின் அவர்திருமேனியைத் தகனஞ்செய்தால் அதனால்வருந்தீமை.

தத்துவங்கட்குமேற்பிரம நிலையதுவானதண்ணருட் பெரியரொருவர்த்; தயங்குபரிபூரணத்திசையானபோதிலவர்தனுவினைத்தகிக்கிலிங்க;---னுத்தரத்தீயினுமிகுவெப்பு நோயினுலுயிர்வருந்திடுநாய்நரி; யுண்டிடின்மன்னனர் புரிசண்டையாலுயிர் துறந்துஙவாவர்காய்நரிக்கே; முத்தனுகத்தழலையிட்டிடின் முன்னவன்றனியிலெரி மூட்டலொக்கும்; மெய்ம்முகிற்பொய்த்திடும் பஞ்சமுண்டாமன்னர்மூதா

சுதாமிழப்பர்; மத்தமில்லவனுடலைமாண் குகைபிநத்திடின் மன்னுறுஞ்சுகமுமுலகே; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே. (௯௬)

## சமாதியின் அளவும்செய்காரியமும்.

பூமிக்குளொன்பதுச்சாணுழமைந்துசாண் கலமும்புரிந்துட்குகைப்; பொருந்துமுக்கோணமா முச்சாணதளவதாய்ப் பொருசதிபின்னடிதலத்திற்;---காமுறப்பஞ்சலோகங்களொடு நவமணிக்கலந்துபாரித்ததன்மேற்; கனத்தவோராசனமதிட்டதன் மேற்கு[illegible]கள்கவின்கொளவிரித்தலன்றி,--சேமமாய்த்திருநீறுபொற்சுணத்துடன்வாசவர்க்கமுநிறைத்ததன்மே; னிலைபெறவிருத்திநன்னீற்றிறைமூடிப்பின்னீண்மேடைசெய்தல்விதியே;---மாமகுடமுடியிடறவலையெறிந்திந்திரன்வலியழித்திட்டவரசே; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௯௭)

## சமாதிசெய்யுந்தானங்களும் அவற்றின்மேலிடுகுறிகளும்.

தன்மனைத்தோட்டமுங் குளக்கரையுமாற்றருகுதளிர் மலர்சோலைகானந்; தக்கநற்பூமிமேலுயர்†மலைச்சாரலித்தானங்களுரியதாகும்;--பொன்சமாதிக்கு மேற்சிவலிங்கமேறிவைக ளொன்றினைபொருத்திவிதிபிற்,புகன்றமுறைதருநிலஞ்சேர்ந்துபூசித்திடப்புகலும்நம்மாகமங்கள்; நன்மைசேர்முக்கடவுளருவமாமரசதும்நாட்டிடலும்விதியதாகும்; நவிலுமிதுசிலபெரியர்மரபதாஞ்சமாதியின்நற்கிரியையாதுமிதுவே; மன்மனத்தொடு வினைப்பூசியாதஞ்ஞானமயத்தனைற்கருள் புரிகுவாய்; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (௯௮)

## இவைகட்கு இத்தானங்களிற்புனிதமெனலும் இவைகளால் இவைகட்குப்புனிதமெனலும்.

பொங்குளைப்பரியாடுமுகத்தினிற்புனிதமாம் புண்ணியப்பசுவதற்குப்; புகழ்மையுறுபிற்புறம் புனிதமாம்பொய்மையிற்பொருள்கொளுமபரமயோகர்;--தங்கள் தந்திருவடிப்புனிதமாமங்கையர் கடமதுடலெலாம்புனிதமாந்; தண்டிரைக்குடிஞையுறைசெம்பு வருவெள்ளத்துசாம்பர்நற்புளியினுலும்;---மங்காதுபுனிதமாமாதவர் கடிருவுள

---

† மலைச்சாரலின்றி மலையுச்சியினுஞ் சமாதி செய்யலாம்.

முமாறுதநற்புனிதமாம்; மாற்றருந்திருவருட்பிரகாசமுத்தாடிவைத்
தவிடமும்புனிதமே;—வங்கநற்றிருமலையினவள்ளலுட்களிகொள்ளவந்
துறுங்குழந்தைவேல; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயி
லை சண்முகதேவனே. (௬௯)

## இல்லறத்தான்விருந்தினரை உபசரிக்கும் ஒழுக்கமிதுவாமெனல்

வருவிருந்தெதிரினிற் போயினியமொழிசொலல் மகிழ்வாய்
வியந்துநோக்கல்; வருகவென் றுள்ளழைத்திட்டுதான்விளக்கவும்வண்
புனற்கொடுத்திருத்த ;—லருகிருந்தன்புரைகளாடிய முதருத்திட
லுமையமிலிடத்துபாய; லருளிநற்றயில்நிறைசுடரொன்றமைத்தரிய
தாம்பூலமதுவளித்தல்:—பருகநற்றுயிலளித்திடலனு செல்கையிற்பற்றி
பின்வழிவிடுதலும; பாரிடத்தெஞ்சாதவில்லோனொழுக்கெனப்பகர்வர்
நூலுணர்ந்தபெரியோர் ;—மருவகம்பாற்கொடியவன் கணரிடத்
தினில்மருவாதிருக் கவருளாய்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை
நாரைமயிலை சணமுகதேவனே. (௭0)

## இல்லறத்தான்விடுவனவும் புரிவனவும்.

பிறன்மனைவிகண்டவாவுற்றுநோக்குறுதனிலை பிழைத்தொழுக
ல்பொய்மைகூறற, பிழைகள்வருசிற்றமுந் தீமைவயிரகுறளைபயே
சொனுமொழிபேசுத ;—லறனிலாமாயையின் கிறிபகர்ந்தொழுக
லிஃதாதியாநதீமைகளெலா ;மறநெறிகளவழுவாதவில்லறத்தானுணர்ந்
தகற்றிடுதனீதியாமாற், —சிறைவாவிநதியினின்மூழ்கிபின்சநதியாவந்
தனைத்திருமந்திரஞ், செபித்தழலையோம்பிவே தாகமத்துதியுடன்செ
ழுமலர்தூயிறைவனை ; மறைமுறைவணங்கலோடதிதி பூசனையாதி
வகுத்தபடியொழுகலறமாம்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை நா
ரைமயிலை சண்முகதேவனே. (௭௧)

## பிறர்பாற் சோல்லாமையுஞ் சோல்வேனவுமிதுவாமேனல்.

மந்திரமும்வேற்றவன் றனையவமதித்தனன் மகளிரைச்சேர்த
தலுள்ளாழ்; வஞ்சகந்தன்வயதுபிறநதநாளவீட்டினுள்வருங் குறை
ப்பெருநிதியமும் ; நந்தவின்மனைவிதன் நற்குணமுமிவையெலாம் நவி
ற்றிடிற்றீமையாமால்; நற்றகுதிவாங்குகடனக்கடன்றீரத்தலும்நல்வ
ழிப்பொருட்டலும்,—பிந்தியப்பொருடனைப் பகர்தலும்மகளிரைப்
பெட்போடளித்தல்தனதுப்; பிழையாதொழுக் கமும்மரபுளோர்பாவ
மும் பிறனொருவனற்குணமுமே ; மந்தாகமுற்றிவை கண்மறையாது

ரைத்திடுதன்மாண் பெனப்பகர்வர்பெரியோர்; மயிலைகண்படுகமலவய லைகண்டுறை நாரைமயிலைசண்முகதேவனே. (௭௨)

## அமுதுக்கு இவைகளாற்குற்றம் நேரிடிற்பரிகாரம் இதுசெய்கவெனல்.

பாண்டத்திணிறையமுதை நாய்கரம்பூனைபுற் பன்றியொடுகோக் கையாதிப்; பகருமிழிஜெந்துக்கள் வாயைவைத்திடுமெனிற்பாண்டம் புறத்திலெறிக ;—நீண்டபூரவாடையிற் கொட்டிட்டவமுதையொரு புறத்தில்வாய்வைக்கினேர்ந்து; நிலைகண்டுவாயளவுவமுதெடுத் தெறிந் துபின்னின்றமற்றமுது தன்னைத்;—தீண்டுதிருநீற்றுடன்பஞ்சகௌ வியத்தையுந்தெளித்து பின்பெடுத்துகொளலாம்; இகழ்கலத்துண்கை யிற் கொசுவாதிவீழிலவை சேர்ந்தவளவகற்றிசேடம்;—மாண்டகு ம்நீற்றினைத்தெளித்துமுட்கொள்க வெனவழங்குவார்நூற்பெரியவர்; மயிலைகண்படு கமலவயலைகண்டுறை நாரைமயிலைசண்முகதேவனே.

## இக்காரியங்களாகாதெனல்.

எட்டாறுசதுர்த்தசியிலிருளு வாத்திதிகளி லெண்ணெயிடல் காலையந்தி; யெரியரவுதீண்டிடும்வேளையிற்பரிதியையெழிற்புனலினே க்கலாகாக்;—கட்டாடையின்றி நீர்ப்படிதலான்கன்றினைக் கலங்குற வெருட்டலாகாக்; கற்பனைகள்பேசுதலுமக்கினியைவாயினூற் காற்றா தலாடைவிலகி;—விட்டசமயத்துமடமங்கையரைநோக்குதல்விடியன் மாலையினுறங்கல்; வெகுதொலைத்தனியேகனித்திரையெழுப்பல் புற் றினுகோவினைவிலக்கல் ;—மட்டுயாழிற்பயினு நாடகத்தின்மன ம்வைத்திடலுமாகாமையாம் ; மயிலைகண்படுகமலவயலை கண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே. (௭௪)

## இதுவுமது.

நடமாடிடும்போது மயிருளர்தலும் பசுவினவில் விடையினூர்த ல்சுடலை; நாறுபுகைபடுதனன்னடையிலானையமும்நவை மிகுச்சூதா டலு ;—மிடமுருதுகாரணமதின்றிகைக்காலுதற விடையாடையின்றி தூங்க; விருக்கையாசனமதைக் காலினாலகற்றுதலுமினிய மென்படுக் கையதனிற்;—றிடமாயிருந்தனம் புசித்தனன்னீருணற்றிண்ணிரவில் பாசடைக்காய்த்; தின்னலிவையாவையுமாகாமையென்பர்நூற்றுறை போயபெரியரெல்லாம்;—மடமாறிவிதியோடுமென்னி நின்றிருவடியில் மனநிலைத்திடவருள்குவாய்; மயிலைகண்படு கமலவயலைகண்டுறை நா ரைமயிலைசண்முகதேவனே. (௭௫)

யாசிக்கினும் நல்லோர்பால் யாசிக்கஅருள்செய்யெனல்.

*ஏற்பதாகாதென்றநம்மௌவையாதி யாமெழிற்பெரியர்சொறகடந்தே; வெய்தமுற்புண்ணியக் குறைவினாலேற்பினுமெழிலைய மிட்டுண்ணெனும்;--மேற்படும்வாக்கியம்வழுவாமலொழுகிவருமேன்மக்கள் பாலேற்கவும்; மெலிநதாவிசோரினுமன்புசற்றில்லாதவிழிலோபகுணத்தோரிடங்;—காற்புகாதிருத்தலுமடியனேற் கருளுவாய்ககாலகைடந்தமுன்னர்க்; கண்ணுதற்கேசவன்வலாரி[illegible]தானரைக்கண்டு யாசித்தவர்கள்பான்,—மாற்கொள்பத்தினி [illegible]முமம் பெற்றலகின் மாருதவிசைநாட்டினர்; மயிலைகண்படுக[illegible] கண்டுறை நாரை மயிலை சண்முகதேவனே.* (௭௬)

இத்தானத்தில் மாத்திரங்கீழ் மக்களால் நேரிடும்பரிசதோஷ மில்லையாமெனல்.

*சங்கரன்றனது திருவிழாவிலுஞ் சந்நிதானத்திலுஞ் சங்கரியுடன்; சாற்றரியவீதிதனிலுலாவவருவுறசவந்தன்னிலும்நெருங்கிநோக்கும்; புங்கவர்களைத்தகையவருணத்தாயினும் பொருந்துடம்பரிசமதனாற்;போந்திடுங்குற்றங்களங்கில்லைவீடுறீ இப்புகலறியசிவதரிசனங்; தங்கணுற்காணவருபோதினும் யாகத்துமறையவர்கடம் மணத்துந்; தாழ்மையோர் பரிசனமதுற்றிடிற்றிருநீறு தூளிதந்தரிக்கவகலும்;-- மங்கலவர்பரிசமற்றைறயகால முறினதிகண்வாவியாடிடவகலுமே; மயிலைகண்படுகமலவயலை கண்டுறை நாரைமயிலைசண்முகதேவனே.* (௭௭)

கேட்டைநாள்விதிபாதம் நவமிசனிவாரம் இதுகளிற்கிழக்கேபயணம் போகலாகாவென்று பரமேசுரமூர்த்தி உமையவளுக்குச் சொல்லியசமையம்.

*கரணத்திலோர்பரமகாட்டை யளவாயினுங் கனிந்தவன்பிலாதுதக்கன்;கடுஞ்சொலாலென்னை வைதிட்டனன்கினையுங் கருதிவாவென்றனல ;—னருளும்பிதைநீகினைத்திடுவென்றிகேட்டையும் விதிபாதம நவமிசனிநா;ளருணனுதயத்திசைக்கே கிலக்காரியமுமழிதலொடுவெற்றிகுறைவாம்;—மூரணித்துரைத்திலன்போதலழகன்றரன் மொழிந்தசொற்கொள்ளாமலே; முன்னநம்மனை போய்ப்பட்ட குறையாலிவையின்மொழிகுணக்கேகில்தீதாம்; --மரணத்திலறிவாதிகலங்கிடுங்காலைநீமஞ்ஞைமீதெழுந்தருளுவாய்;மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே.* (௭௮)

### கற்புடையமடவாரொழுக்கங்கூறல்.

தன்புருடனுண்ட பின்றானுண்டனித்திரைத் தங்கிபின்முன்னமெழுவார்த்; தணியாதகோபமாய்வைதிடினுமெதிர்நின்றுதாம் பதிற்பேசிடார்கள்;—தன்புடற்றடிக்கினுங் கனிவோடிருப்பர்வெந்தூர்ப்பெண்களுடன்கூடிடார்த்; துணிபுகொண்டயலார்கள் வீடதேவாசமாயுறைநதிடார்த்துணைவர்நீங்கி;—னின்புடன் றன்னையெழில் செய்திடார்வந்தவுடனெழின் மணக்கோலமுறுவ, ரிசுகாரியங்களைச் செய்யென்றுசொல்லுமுனமுனையதைமுடித்துவிடுவார்;—வன்கண்மையாகநன்பணியெலா முயற்சியினுமனநொந்திடார் ; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரை மயிலைசண்முகதேவனே. (எகூ)

### இதுவுமது.

சற்றேனுமழகிலானாயினும் நோயினிற் சதாவருந்துவனாயினுஞ்; சமைமூப்பனாயினும் பழி தொன்றுநினையாமற்சார்புடன் முயங்கிவருவா;—ருற்றவவனைவாவினுக்கேற்ற படியொழுகுவாரொண்சுடர்ப்பணிவேண்டுமென்; றாடலேசெய்திடாரோங்குதுயருற்றிடினுடன் றுயாமுற்றுமெலிவார் ;—வெற்றிகளிகொண்டிடின்விழைந்துகளிகொள்ளுவார் விளக்குதாட்புனலைகங்கை; மேலாயதீர்த்தமென்றெண்ணியும்பருகுவார்விளங்கறக் கற்புமடவார் ;—மற்றனர்பெருமையையெத்தேவராலுமே வரைந்திடற்கரிதுமாதோ; மயிலைகண்படு கமலவயலை கண்டுறைநாரை மயிலைசண்முகதேவனே. (அய)

### இதுவுமது.

மூப்பினோரில்லாது தனிமையிற்றங்கிடார்முதுவிழாவிந்தைநோக்கல்; முற்றுநோன்பாறறனன்னதிருப்பினிராடுதல மொழிவருந்தேவர்தொழுதற்,—செப்பரும்பதியேவலன்றி மற்றிவைகளிற்சிந்தைசற்றேனும்வையார்ச்; சிந்தையும்வயதெனறுமேதன் பதிப்பெயர்சொலார்ச்சேடமமுதாய்க்கொள்ளுவா,—ரொப்பாகவெதிரினில்வீற்றிடாபொருமையாய்ப்பதியோடிருந்தோங்கியே; யுன்னுமுறையாகவேயில்லறத்தருமங்களுறுதி யுடனேபுரிகுவார் ;—வைப்புறுங்கற்பதி யினையுள்பெருகற்குமேமஞ்சளுடன்முழுது மணிவார்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரை மயிலைசண்முகதேவனே. (அக)

### இதுவுமது.

முற்றறக்கற்பினோர் பூப்பில்வெளியுற்றிடும் மூன்றுநாளெல்லை புருடர்; முன்னின்றுமலர்முகங்காட்டுறார் மனந்தனின்மொழிவதொ

ன்றுண்டாயிடி;—னுற்றநீராடிட்டபின் புரைத்திடுவர் தங்கொழுநர்
தந்தாய்தந்தையோ; ரொறுப்பினுஞ் சலனமேமேவிடார்க் காதலர்க
ளொருமுறைவிளிக்குமுன்ன ;—மெற்றமுதமுண்ணிடினுமதனை விட்
டெழுவர்தமையீன்றதாய் தந்தைமக்க; ளிடத்துமுளவன்பினும்மிகவ
ன்போடொழுகுவாரினிய காதலரிடத்தே ;—வற்றுறுந்திருவென்று
முரலம்பிதடிசுளகில் வைகுறூர்த்தலையும்வையார்; மயிலைகண்படுகமல
வயலை கண்டுறை நாரைமயிலைசண்முகதேவனே. (அஉ)

காதலரை அவமதிக்கும் மறக்கற்புடையோர் அடையுங்கதி

தன்மனக்காதலன்குறை யெடுத்தோதுவர்கடாழ் கடுஞ்சொற்
கள்புகல்வோர்த்; தரையினாய்நரிகளாய்ப்பிறந்து திரிவாரெதிர்ச்சண்
டையொடுசீறிவிழுவோர்;—வன்கானகத்துறைப்புலியாய்ப் பிறந்திடு
வர்மற்றொருவனழகுகண்டே; மகிழ்ச்சிகொள்வோர் கொடுங்காட்டி
னிற்பேயதாய்வந்துழன்றலைந்து திரிவார்;—முன்காதலன் பசியினால்
வருந்துறுகையின் †மோதிதத்துடனுண்டவர்; முடைப்பன்றியாய்வரு
வர்கணவனைப்பணியாதுமுகமனொடுதேவர்தொழுவோர்;—மன்றமாய்
த்தீநரகின்மாழாந் திருப்பரெனவழங்கிடுந் தொன்மைநாலே; மயிலை
கண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலை சண்முகதேவனே. (அங)

கடன்படலாகாதெனல்.

மனுகுலத்திபீலன் முற்பவத்துமறையோனுக டன்னினனவனி
டத்தின்; மருவியோர்வணிகனுஞ்சதுர்த்த னொருவனுமிருவர்வாங்கு
கடனியாமையாற் ;—சனியுமிப்பவத்தரசனுமவர்க் கவ்வணிகனுஞ்ச
கடமொருபதாகிச்; சதுர்த்தனொருபாற்கயமதாகிவந்துழைத்துமதுத
ணியாமலிருவோர்களும்;—ரனியுடல்வெளுத்துசெவிகறுத்த பரியாய்
வந்துநாட்படவுழைத்ததென்று; ஞனிலத்தெவருமேகடன் கொள்ள
லாகாதுகொண்டிடினடுக்கமுறறே;—மனுமுயிரையாயினு மாறியக்க
டன்றனைமாற்றலேமேலின்பமாம்; மயிலைகண்படுகமலவயலை கண்டு
றைநாரைமயிலைசண்முகதேவனே. (அச)

மேன்மக்கள் போதகாசிரியரிடத்தில் நடந்துகொள்ளும் ஒழுக்க மிதுவாமெனல்.

உரியநற்றவங்கள்பலசெய்து பெற்றெடுத்தபின் பூட்டிபாலனை
டைவினி; லுணவாதியால்தனைப்பாலித்ததந்தைதாயுதவியோருடலள
வதா ;—மரியவஞ்ஞானவிருணீக்கியுட் கண்ணதனையருளொடுவிளக்
குகுரவோ; ரன்பினாற்செய்யுதவியாலறம் பொருளின்பமனித்தமில்

† மோதிதம்—சந்தோடம்.

வீடுமானுர் ; தரையிலுயர்குடியினிற் பிறந்தமேன்மக்களவர்தம்மை யெவ்வாறு காப்பார்த்; தங்குலப்பெரியர்க்குமேற்பெரியரென்றுதாஞ் சத்தியமதாய்க்கொண்டுமே ; மருவியவர்காரியம் யாவையுந்தமதென் றுமனத்தினிற் கொண்டுமுயல்வார்; மயிலைகண்படுகமலவயலை கண்டு றைநாரை மயிலைசண்முகதேவனே. (அரு)

இதுவுமது.

எதிரினிற்பாதுகைக்காலுடன்வந்திடா ரெரிபுகைச்சுருட்டுபிடியார்; ரிருமாப்பதாயெதிரிலட்டகாசத்துடனிருந்திடார் பொடிக்குமறைவார்;—குதகுலத்தோடுமவர்தன் வீடுவருவரேற்கொள்களிப்புடனெழுந்தக்; குவித்தகையொடுதொழுதுவந்திட்டகாரியக்குறிப்புணர்ந்தவர்களிக்க ;—விதமாய்நடத்திபின்வழி விடுவரீதலாலெண்ணத்திலெளிமை செய்யார்; ரெப்போதுமேன்மக்கடாழ்மை யோடொழுகலாவிருகிலம்விளங்குமளவும்;—மதலையைப்பெற்று மேற்சந்ததிகள்வற்றுதுமாண்போடிருந்து வாழ்வார் மயிலைகண்படு கமலவயலைகண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே. (அசு)

போதகாசிரியர்முதலாகிய பெரியோர்களை அவமதித்தொழுகுங் கீழ்மக்கள்அடையுங்கதி.

போதகக்குருவாதிபெரியருக் கெதிரினிலகந்தையொடு புற்றொழிலினைப்; புரிகுவோரன்பச்சமில்லார்கணிந்தை சொற்புகல்வரோமொழுத்தாயினு;—யோதிவைத்தவர்மனங்கலங்குறச் செய்யுமிச்சண்டாளரோருடன்றே;யொறுத்திட்டு வேமபடர்நரகில்செய்வேதனைகடாமொருவரன்றியுணரார்ப ;—பேதமுறுநரகினெடு நாள்வதைந்திட்டபின் பிறந்திடுவர்மண்ணில்நாயாய்ப்; பின்னரோருகமளவுகிருமியாய்ப்பிறந்துதுன்பெய்வர்கீழ்மக்களென்றே;-மாதவப்பெரியோர்களுரல்வழிப்புகன்றனர்மாதங்கமுகற்கிளையவா; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே. (அஎ)

போதகராவாரிவரே எனல்.

புலைகொலைகள்களவு கட்காமாதியைந் திளைப்போக்கினின்றிடுதுயராய்ப்; பொய்மையின்மனத்தராய்த் தேவதாபத்தியொடுபொலிவுமேற்சின்னமுளராய்;—நிலைதவருகிழ்மக்கணேச மற்றவருமாய்நியமத்தின்மேன்மையுளராய்; நிகழ்த்தருஞ் சாந்தகுண சன்மார்க்கநடையராய் நீதிவழுவாதவராய்க்;—கலையெலாங்கற்றுமேற் பொருணிலை

மனத்தாய்க் கனிந்தவன்புளர்க்குவோனுங்; கருத்தாய்ப்பதகரைக் காணாதுசெல்வராய்க்கழறுமிப்பான்மையுளரே;—மலைவிலாப்போதக குருவாவரவர்பாலின் மலிகலைப்பயிலனலமே; மயிலைகண்படுகமலவய லைகண்டுறை நாரைமயிலை சண்முகதேவனே. (௮௮)

## மக்களுட்பதடியாவோன்.

செப்பரியதந்தைதாய்க்குரு தெய்வமக்கினித்தென்புலத்தவாதி தியர்ச்; சீர்மிகத்துறந்துளார்வானபடரத்தனொடுதீநிறப்பிரமசாரி;—துப்புறுஞ்சுற்றங்கள் வருவிருந்தொடுமனைவிதுகளினற் புதல்வர்வறி யோர்த்;தூய்மையுளவழியடிமையிவரையென்றுமேதுயராது காவா தவ;—னுப்புகடலுலகினின் மக்களுட்பதடியென்றுரைப்பர் நான்மு றைதெரிந்தோ;றாதிருற்றவாலிலையினால் வரும்மாய்கையினுரியசங்கற் பத்தினால் ; மப்பறுஞ்சிவபூஜை மறந்துபிற்றுநிகிரவள்ளலுக்கருள் செய்தவா; மயிலைகண்படுகமலவயலைகண்டுறை நாரைமயிலை சண்முக தேவனே. (௮௯)

## மணஞ்செய்யுங்காலத்தில் மணப்பெண்ணின்கைப்பற்றும் முறைமை,

மறையோர்களாதியாய் நால்வருந்தத்தம்வழிகன்னியை மணப் பிலங்கை; மகிழ்ந்துபற்றுதன்முறைமைமறையோர்களரசர் தங்கன்னி யைமணப்பிலம்பின்;-குறுமுனைப்பற்றுதன்முறையிருவர் வணிகர் தங் குலமகண்மணப்பிலுழவின்; கோல்பற்றன்முறைமூவர் வேளான்குலப் பெணைக்கொள்ளின்முன்றானைபற்றல்; --மறைவிதிகளாம்நீதிவழுவாம ணத்தினில்வந்தபெண்மாநிலத்தின்; மாண்புறுஞ்சற்புத்ரகுழவியைப் பெறுகுவாள்வசையுறுமணத்தில்வந்தாள்;—வறிஞறுஞ்சிறுவரைப்ப யப்பளென்றெனவிதிகள்வழங்குமாற்செந்தில்வாழ்வே; மயிலைகண்படு கமலவயலை கண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௯௰)

## சமீபத்திருந்தும் பெரியோர்களது நலமறியார்கள் கீழ்மக்களெனல்.

மனத்தெளிவுகொண்டசற்பெரியோரிடத்திலே மன்னிநெடுநாட் பழகினு; மாறாமலிடைவிடாதருகினிலிருந்து மவர்மாண்பினைச்சற்று மறியார்;-தனவைப்புதமதிடத்திருந்து மதையறிகிலாத்தரித்திரன்றா மரைக்கீழ்த்; தங்கிவாழ்மண்டூகம்வன் பதார்த்தமுமெலுந்தங்கள்ப லவிளக்கி;—னினடுவிருக்கின்ற குருடனிவர்போலாவரிழுக்குடைக் கீழ்மக்களா; மெப்போதுமேன்மக்கள்பெரியோர்களருமையையெண் ணிமேன்பாடுசெய்வார்;—வனம்வாழுகின்றகுறமாதினுக்கிசைந்த சுக

மணவாளவடிவேலவா; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௬௧)

### இப்பாவிகள் நரகத்திற் குடிகொள்வாரெனல்.

கண்ணினாற்காணாதகருமங்கள் யாவையுங்கண்டதாய்க்கட்டுரைக்குங் கசடனும்பிறர்கண்மேற்புறங்கூறுதொழிலனுங் கனிந்துசெவிகொடுக்குமவனும்;—மெண்ணத்திற்பெரியரைக்கண்டு வழிபாடிலாதெளிதாய்நினைக்குமவனும்; மேதில்பரதாரத்தைத்தாயென்றெண்ணாதவிழிபரமசண்டாளனுங்;—கண்ணீர்வழிந்தொழுகவேழைகட்கிடர்செய்யுங்காதகனுநற்குடிகளைக்; கனவஞ்சகத்தினாற்றீங்குசெய்தலைத்திட்டகடியவெம்புலிபோல்பவன்; —மண்ணதனிலினமுளபாவிகண்மானரகில்வாழ்வதுஞ்சத்தியமதாம், மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௬௨)

### பரமசண்டாளா இவரெனல்.

தந்தைதாய்ப்பசித்திடத்தான் புசித்திடுபவன்சற்குருவை நிந்திப்பவன்; ருஷிநேர்கோபத்துமுறை மாறிவைபவன்சூழ்மையுறுதூது புகுவோன்;—சிந்தையுற்றொருவனற்பெரியோர்கள்கையினிற்செய்தருமம் நாடியவனைச்,சிநேகவேறுயிடப்போதிச்சழித்தலுங்குறைத்தலுஞ்செய்பாதகன்; முந்துறித்தவனிநகவேட்டிடுந்துணைவனும் முதுநூற்பிழைத்தொழுகுவோன், முகத்துக்குமுன்னொன்றுமாறில்பின்னொன்றதாய்மொழிபவன்கற்றபெரியோர்,—வருநூறக்கண்டெழானிவரெலாங்கொடும்பரமசண்டாளர்மானரகரே; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௬௩)

### இவைகளைப்பார்க்கிலும் இவர்கட்கு அதிகதோலையில் மறைந்திருக்க வேண்டுமெனல்.

அண்டத்தரவர்தாமுநடுக்கமுற்றஞ் சுறுமரவாதிவிடவுயிரையு; மஞ்சாதமதவீரயானைவன் புலியாளியடுவிலங்காதியதையும்,—கண்டபோதொருசற்று விலகிடின்வலியாதுகைவசமுமாக்கிவிடலாங் கற்றறிவுநலலோர்கள் கூட்டுறவுமில்லாதகயவரொடுமென்புசற்றுங்;—கொண்டவுளமில்லாதுபக்தர்போற்காட்டி நிரிகொடுமைமிக்குறுகுறும்பர்க்; கோதழுக்காற்றினாற் பின்கலகமூட்டிடுங்குடிகேடனிவர்கள் கண்ணில்;—மண்டமதுகாட்டாதுவிலகிவெகுதொலையோடி மறைவதேபரமசுகமாம்; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௬௪)

## பொய்மையால்வரும் இழிபு.

பொய்மையேபுகலுவோரொரு பொழுதுமெய்மையைப்புகலினும்பொய்மையாகும்; பொய்மையாற்றேடு பொருளிகபரத்திரண்டினும்புண்ணியச்சுகங்கொடாது;—பொய்மைசிலநாட்சொலிப்பின்புநெடுநாளதாய்மெய்மையேபுகன்றுவரினும்; புகல்நீதிவணிகர்தாங்கொடுத்துவாங்கிடுதற்குபுந்தியினுமையமுறுவார்;—மெய்யர்தம்முன்பிலேசெல்கையிற்றலைநாணியிழிபிணம்போல்மெலிகுவார்; மேதினியினீதியோர்துரும்பிற்குமதியார்கள் வினைக்கெலாமிடமாகுவார்;-மையுறுந்தாழையின்பொய்மையாலல்லவோவனைந்திலார்சிவமூர்த்தியும்; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௧௫)

## இச்சமயங்கட்குமாத்திரம் பொய்மைகூறலாமெனலும் சூளுறைப் பொருள்களும்.

கங்கைசம்போகத்துமுயர்ந்தோர்களுயிரதனைநாட்டி நிலைசெய்போதினும்; நற்பசுவினுபத்தைவிலக்கிடும் போதினும்நாரியர்கடிருமணத்து;—மிங்குமேன்மக்களுக்கிடர்நீக்குபோதினுமியம்பெலாம்பொய்மையென்றே; வியற்றரியநூற்பெரியரோதினரிது நிற்கவியம்பிடுஞ்சூளுரைக்கில்;-பொங்குமறையோர்தமதுசத்திபஞ்சூளுறுகபுவிமன்னர்வாடோளினைப்; புரிகசூள்வணிகரும்பொன்னினைச்சூளுறுகபுகழ்மையார்ச்சதுர்த்தர்தாமும்;—மங்கலில்வாளுமற்றவைகள்சூளுறுகவெனவழங்கிடும்மனுநூலரோ; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௧௬)

## கொலையால்வருங் கொடுமை.

சத்தாகுமுயிரினைக்கொல்லாத செல்வமேசெல்வமாந்தறுகண்ணதாய்ச்; சார்ந்துமோருயிரினைக்கொல்லாத ஞானமேஞானமாந்தவமுமதுவாம்;--பத்தியிற்றோருயிரைகொல்லாதசீலமே சீலமாம்பத்தியதுவாம்; பகர்கொலைகள்செய்யாத தருமமேதருமமாம்பகர்மோக்ஷசுகமுமதுவாம்;—முத்தர்நற்றவயோகர் புண்ணியர்நடுக் கமுறுமுயிர்கொலைச்செய்துண்ணுவோர்; மொழிவரியதீநரகின்மாழாந்துநெடுநாண்மூழ்கியதிலழிவர்மாதோ; -மத்தமாய்நீருயிர்க்கிடர்செய்தமுனிமகவர்மச்சமாயினதையறிவீர், மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௧௭)

### சாமத்தால்வருங் கோடுமை.

அறம்பாவமின்னதென்றறிய வொட்டாது நல்லார்கள்பொல்லார் தம்மையு; மறியவொட்டாதெய்வபக்தியுஞ் சற்றிராவரியவினைகட்கே துவாரந்; திறங்குணத்தோடுநற்குலமுறைமைபோக்கிடுந் தீக்கொலைப் பழிப்பாதகஞ்; செய்துணிபுதந்திடும் பொய்ம்மைபுகல்விக்குமே தீமையாங்காமமதனாற்;கறங்குமனமாய்வேதனிந்திரற்சோமனுங்கனதுன்ப மிகவுற்றனர்க;கருத்தழிந்த சுரனொருபான்சிரமிழந்தனன் கானவன் சாம்பரானான்;-மறமாகுகாமத்தினாலழிந்தவர்தமைமாநிலத்தெவருரை செய்வார்; மயிலைகண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலைசண்முக தேவனே. (௯௮)

### அவை அடக்கம்.

செப்பருந்தெய்வீகதிருவாலவாயினிற் சிறந்தமுச்சங்கத்தினுஞ்; சேகரபபுலவரவர் தம்மோடெப்வாதுபுரிதிறல்கொணாற் கீரதேவன்;— துப்பாநல்லருணகிரியாராதியோருனைத் துதிசெய்கெம்பீரரவர்காற்; றுகளுக்குமருகனலலாத வெண்புற்கவியைத்துலங்குநூற் கவிஞர்நோக்கி; யொப்புவாமெனவிறெண்ணியோதினேனெனை தனினுதவிலாபபதர்நெல்லதி; லோங்குநீர்ப்பாலுடன்கலக்கினுஞ் சொல்வரிவ்வுலகரிகழாதுவதுபோல்;-மபபற்றவுனதுசீர்வருகையால் தனையுமகிழ்ந்துமுட்கொள்வரென்றே; மயிலைசண்படுகமலவயலை கண்டுறைநாரைமயிலைசண்முக தேவனே. (௯௯)

ஐம்மூர்த்தியாகினின்றைந்தொழினடத்துமோரரனுமுமை யொடுவாழியே; யைந்தருக்கிறையாகித்தேவரவர்வாழிவேதாக மக்கலைகள் வாழி; செம்மைதருநவைநதெழுத்தொடு நீறுவாதியாஞ்சின்னங்கடழைத்துவாழிச; சிவவேடமது பரித்திலகுசிவனடியரொடுசிறந்தமேற் சைவம்வாழி;—மைம்முகிற்பொழிந்துலகில் பலவளத்தொடுநான்குவருணங்களோங்கிவாழி ; வகுத்தநான்காச்சிரமம்வாழி மாகவிந்தரும் மன்னிநிலைபெற்றுவாழி; மம்மகர்மிகுசெய்யுமூன்றனையுஞ் புண்ணியர்கண்மண்ணினெடுநாள்வாழியே; மயிலைகண்படுகமலவயலைகண்டுறைநாரைமயிலைசண்முகதேவனே. (௧௦௦)

தழையுநாலெட்டறமும்வாழி நங்கந்தவேடாளடித்தொண்டர் வாழித;தரணிகாத்திடுமன்னரறநீதிவாழி நற்றவமேலாமோங்கிவாழி;- மொழிவரியவற்புதச சிவஞானபாலையமூர்த்திதன்பீடம்வாழி; மொய்த்தவர்களாற் சூழுபொம்மபுரமும்வாழி முதற்கொடையவள்ளல்

வாழி;-தொழுமன்பர் குழுச்சொலுமுருகநாமத்தொனிகடேங்காத மயிலைவரையிற்; றொடர்ந்து நற்றிருப்பணிகள்செய்பவர்களெவருமேசெல்வத்துயர்ந்துவாழி;-மழைமுகணிறைபொழில்கள் சூழ்மயிலைமலையதின் வள்ளியாடெய்வகுஞ்சரிமகிழ்; மன்னிநிலைபெறறநமதறுமுகத்தேவுமெவாழிபல்லாண்டுவாழி. (க0க)

மயிலாசல சதகம் முற்றிற்று.

---

௳

# †மயிலாசலபவனிச்சிறப்பு.

தேவர்புகழும்மயிலாசைலச்செவ்வேலர்
மூவர்தொழிலுஞ்செயவல்லாரின் முன்வந்தார்
கோவருகாமன்போரிடை பட்டேகுலைவேனென்
றேவருமொழிவாய்வருமுனமெம்மூரென்றாரே 1.

வேலார்மயிலின்பேலேபவனியாய்வியனில்லின்
பாலேவந்தார்மயல்மேல்வந்தேன் பகருங்கான்
மாலேநிறருமெனக்குமபேதமெனவாய்சொற்
சோலாமுனமிவ்வூர் பேதமதெனசொற்றாரே 2.

மின்னுமுடியோராறுடன் மயிலாசலமேவும்
மன்னுமவேலார்பவனியாயில்லின்முனவந்தார்
முன்னினன்யானும்டம்பாவெனவாய்மொழிமுன்னே
யின்னுமிரண்டுளவெனறவர்சென்றாரெனனேயோ 3.

சயம்புகழ்மயிலாசைலர்பவனியாய்சாரில்லின்
நயம்படுமாறேயெய்தினர்யானும்நயந்தேகி
வயம்படுமாறுமுகததிர்சூர்வதைசெய்திரென்
றியம்புமுனேயொருநதைமுகமெனுவென்றாரே 4.

விண்ணூறுமயிலாசைலர்பவனியாய்வியனில்லின்
நண்ணுறவந்தார்நான்மயல்கொண்டேநடந்தேகி
யெண்ணுறுதாரமதாயெனைக்கொள்வாயெனுமுன்ன
மண்ணன்மாபேரோர்கொடியுண்டென்றகன்றாரே 5.

இப்பவனிச்சிறப்பு இந்நூலாசிரியர்மாணுக்கர்
†மணி. அப்பாவையரியற்றியது.

---

இந்நூலாசிரியர் மாணாக்கர்

## மணி. அப்பாவையர் அவர்களியற்றிய நூல்களுள்

## அச்சிற்பதிப்பித்தானதுகள்.

திருவதிகைப்புராணம்
ஷை நாமாவளி
ஷை கீர்த்தனை
ஷை திருப்பள்ளியெழுச்சி
ஷை திலதவதியார் திருநாவுக்கரசு சுவாமிக ளிரட்டைமணிமாலை
ஷை திரிபுரதகன திருவகவல்
* ஷை விநாயகர்ப்பதிகம்
* ஷை சுப்பிரமணியசுவாமி பதிகம்
* ஷை இலக்குமி பதிகம்
சித்திவிநாயகர் பதிகம்
* திருவதிகை நவக்கிரகமாலை
* ஷை சனிபகவான்ருத்திரம்
* ஷை வைரவர் விருத்தம்
* ஷை திருநந்திதேவர் பிள்ளைத்தமிழ்
ஷை திருநாவுக்கரசு சுவாமிகள் பிள்ளைத்தமிழ்
* சிவப்பிரகாசசுவாமிகள் பிள்ளைத்தமிழ்
புட்பாசலபுராணம்
காசி விசுவநாதர் பதிகம்
சோமேசுரர் பதிகம்
வீரபத்திரசுவாமி பதிகம்
* இராமலிங்கசுவாமி பதிகம்
பழநியாண்டவர் பதிகம்

## அச்சிற்பதிப்பிக்கப்படுகிறதுகள்.

மயிலாசல பவனிச்சிறப்பு, நால்வரருட்புகழ்ச்சி.

## அச்சிற்பதிப்பிக்கப்படுவதுகள்.

ஆசிரியர் இருபாவிருபஃது (இதில் சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகட்கு வெண்பாவும், பண்ணுருட்டி நமசிவாய நாவலருக்கு அகவலுமாக செய்திருக்கிறது.)

திருவதிகையுலா, (இது முற்றுப்பெறவில்லை)

திராவிடவீரசைவ மரபட்டவணை (இது தற்காலத்திலுள்ளவீரசைவ பஞ்சமடங்கள், அதினுள்ளிட்ட மடங்கள், மடாதிபதிகளின் சரித்திரச்சுருக்கமும், சிவப்பிரகாசர், சாந்தலிங்கர், முதலிய தெய்வீக விற்பனர்களின் சரிதமும், வீரசைவப்புலவர்களின் சரிதமும், தணிகை, சென்னை, காஞ்சி, புதுவை, மேல்பாகை, பண்ணுருட்டி, புதுப்பேட்டை, சோலை, கூடலூர், கூரைநாடு, கடகம், நெய்ப்புக்கோயில, இவ்விடங்களில் முறையே வீற்றிருந்த, கந்தப்பையர், ஞானசுந்தர ஐயர், கச்சபாலய்யர், கனகசபை ஐயர், சிதம்பரசுவாமிகள், சுப்பிரமணிய ஐயர், குழந்தைவேலையர், சிவயோக அப்பாவையர், அம்பலவாணையர், சாமிநாதஐயர், சாம்பசிவ ஐயர், சுப்பையர், முதலியவர்களின் வம்சாவளியும், விவரித்தெழுதப்பட்டிருக்கிறது. இஃதோர் சத்தியரூபமான நூல். இதுவும் இன்னும்பூர்த்தியாய் எழுதப்படவில்லை. மேற்கூறிய மரபினர்களின் வம்சாவளி சிலகிடைத்தன, சிலபாகங்கிடைக்காமையிற்றாமதிக்கிறது. சிறிது தாமதிக்கினும் நன்றாய் ஆராய்ந்தெழுதிப் பதிக்கவேண்டுமென்பது கருத்து.)

---

* இக்குறிப்பிட்டுள்ளன மட்டும் விற்பனைக்குக்கிடைக்கும்,

57
... SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR MADRAS 41

சிவசண்முகன் றுணை.

# ஓராவசியகவறிவிப்பு.

அன்பர்காள்!

ஆசிரியர், நமசிவாய நாவலர் என்பார். மயிலாசல சதகமியற்றுங்கால மோனச்சுபகுணஞானபாகராய், சுத்தவைதீகராயுத்தமகுணத்தராய், உலகப்பற்றைறயொழித்த மனத்தராய் வீற்றிருந்து கொண்டியற்றினர் என்பது பல்லோருமறியக் கிடந்ததாயினும் இன்னும் அவருண்முகநோக்கம் அன்னோரை யொருவாதுடன் றெண்டுபூண்டொழுகிய வெற்கும் எம்போன்ற சிலர்க்குந் தெரியுமல்லது பகிரங்கமாய்ப டலர்க்குந் தெரியாமைபற்றியதை வெளியிடுகின்றோம். பறையடித்து வெளிப்படுத்தத்துணிந்த வஃது முடிசுதல் எம்மாலும் எமமுள்ளிட்டாராலும் எவ்வாற்றானும சாத்தியமின்மையென்பது தெரிந்ததாயினும். ஆசிரியர் கொண்ட கொள்கையிடத்துவைத்த அன்பின் பெருக்கால் அஞ்சாதுங்கூசாது மறிவிப்பதை அறிஞர் நகையார் தங்கீகரிபபார்களாக (அன்னது.) தாம் பூசித்து வழிபடும் குன்றுதோறுடுங் குமரனாகிய குமாரக்கடவுட்கோர் கோயிற்கண்டு அதில் அப்பிரானைத்தாபித்துத் தரிசித்து வழிபடல்வேண்டும், என்பதே.

அதைமுடிக்குமாற்றலெற் கில்லையாயினும் ஆசிரியர் கொள்கையையாவது கூறிக்கூறிசிந்திக்கின் அஃது அனபுடையார் மாட்டுசென்று அவருளத்தை யுருக்கியோர் கான்முற்று பெறற்கிடமாயினுமாகுமென்பதுகொண்டு துணிபுற்று இந்நூற் சிறப்புப்பாயிரததும்,” மலமோட்டுஞ்சண்முகற்கோர் கோயில்வகுத்திட வெண்ணி, எனறறிவித்தாம். செவவேலாற்சூர்தடிந்த சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன திருவருட்புரிவாராக சுபம்.

இங்ஙனம்,

☞ மணி. அப்பாவையர்,

பண்ணுருட்டி,

## மயிலாசலசதகங் கிடைக்குமிடங்கள்.

பாலூர் சோதிடபண்டிதர் அப்பாயிஐயர்.
விழுப்புரம போர்ட்ஸ்கூல் உபாத்தியாயர்-கிருஷ்ணசுவாமி ஐயங்கார்.
கவரப்பட்டு போர்ட்டுஸ்கூல் எட்மாஸ்டர்-அப்பாதுரை ஐயர்.
தூக்கணாம்பாக்கம் போர்டுஸ்கூல் உபாத்தியாயர்-பழநிமுத்தையர்.
வெள்ளையங்குப்பமடுத்த புதுப்பேட்டை-பரசுராமபடையாச்சி.

இவர்களிடம் இப்புத்தகம் க இ ௭ ந அணு செலுத்திப்பெற்று